ஞானசம்பந்தம்

மலர் 12] விஜய௵ ஆனி௴ 10—7—53 [இதழ் 8

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான
திருவையாறு ஐயாறப்பர்கோயில் தோற்றம்.

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருஞானசம்பந்தர் தேவாரம்

முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆகியோர்களின் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய பாடல்கள்தோறும் குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. அற்புதச்செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக் கின்றன.

டிம்மி 1x8 சைஸ். பக்கங்கள் 768.

விலை விபரம்:

ராப்பர் பைண்டு: ...	**ரூ. 3—8—0**
ரிஜிஸ்டர் தபாற்செலவு வகையரு	ரூ. 1—5—0
காலிகோ பைண்டு: ...	**ரூ. 5—0—0**
ரிஜிஸ்டர் தபாற்செலவு வகையரு	ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

ஷராப்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயூரம் P. O.
தஞ்சாவூர் ஜில்லா.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 12] விஜயஸ்ரீ ஆனிமீ 10—7—53. [இதழ் 8

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

சிறைப்பள்ளியில் தெய்வ வழிபாடு

சிறுவர் தவறுசெய்வது இயல்பு. சிறுவர் செய்யுந்தவறு விளைவறிந்து வேண்டும் என்று செய்யப்பட்டன அல்ல. அவர்களுடைய சூழல், தேவை அவர்களைக் குற்றஞ்செய்யத் தூண்டியது; குற்றவாளியாக்கியது. அவர்கள் உலக இயலையும் அறிந்து, அறிவுநிலையும் உயர்வார்களானுல் ஒருபோதும் குற்றமே செய்யமாட்டார்கள். வெளியுலகிலேயே பழகி வேஷம்போடும் தனிமனிதன் செய்யும் சிறுகுற்றத்தைக்கூட சிறைப்பள்ளியில் இருந்து வெளிவந்த மாணவன் செய்யமாட்டான். ஏனென்றுல் தான் அறியாமலே செய்த சிறு குற்றம் அவனைச் சிறைப்பள்ளியில் சேர்த்தது. சிறைப்பள்ளி ஒரு தவச்சாலை. அங்கு ஞானயோகத்திற்கும், கர்மயோகத்திற்கும், பக்தியோகத்திற்கும் இடம் உண்டு. சிறைப்பள்ளி ஆசிரியர் யோகசாதனைகளைப் பயிற்றுவிக்கும் உண்மையான தவசிகள். அவர்கள் மாசுபட்ட மாணவர் சிந்தனையை ஒழுங்குபடுத்த அவர்கள் சிந்தனையை எப்படியாவது எப்போதும் கவர்ந்து, நல்ல எண்ணமும், நல்ல சூழலும், நல்ல செயலும் அமைய

செய்துவருகின்றார்கள். எதனையாவது சென்று பற்றிச் சிந்திக்கும் மனித உள்ளத்தை ஓய்ந்திருக்கவிட்டால் எதனை யாவது சிந்திக்கும். தீயனவும் சிந்தனையில் வரலாம். சிந்தை யில் முற்றியன செயலிலும் பிரதிபலிக்கலாம். அப்படி நிகழாதவாறு எப்போதும் தனக்கோ—பிறர்க்கோ நன்மை தரும் கண்யமான சிந்தனை, கண்யமான செயல் நிகழச் சூழலை மாற்றிக்கொடுப்பதே ஆசிரியர்களும், ஹாஸ்டல் கண்காணிப் பாளர்களும் மேற்கொள்ளவேண்டிய வேலை. மாணவர் களிடையே வம்பும் தும்பும், கட்சிப்பிளவும், சாதிப்பிளவும், சமயப்பிளவும் உண்டாகும் சூழ்நிலையில் பணியாற்றுவது ஆசிரியர் கடமையன்று. அதிலும் பெரும்பாலான நேரம் மாணவர்களோடு பழகி அவர்களிடம் நிகழும் சிறிய தீமை களையும் தெரிந்து அதனை இனிய சொல்லாலும், செயலாலும் விலக்குபவரே மாணவர் விடுதி காப்பாளர். இத்தகைய சூழ்நிலையில் உள்ள உயர்ந்தநோக்கில் உழைக்கும் **தஞ்சை சிறைப்பள்ளியைச்** சென்றமாதம் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது.

சிறைப்பள்ளியின் ஒவ்வொரு வகுப்பிலும் செயலும் வளர்கிறது; சிந்தையும் வளர்கிறது. நமது முதன்மந்திரி **கனம் ஸ்ரீ இராஜாஜீ அவர்கள்** சிந்தையை வளர்ப்பது மட்டும் கல்வியாகாது; செயலையும் வளர்ப்பதே கல்வி என்று தொடக்கநிலைப் பள்ளிகளில் பாதிநேரம் படிப்பும், பாதிநேரம் பெற்றோருடன் செயலிற் பங்குகொள்ளவும் திட்டம் வகுத் திருக்கின்றார்கள். பழைய குருகுல முறையில் மாணவன் ஆசாரியன் வீட்டுவேலைகளைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து, மிகுந்தநேரத்தில் சிந்தனையை வளர்க்கப் படிப் பான். ஆசிரியரும் தம் வீட்டுப் பணியின் வாயிலாக மனித வாழ்விற்கு வேண்டிய நேர்முகப் பயிற்சிகளை—உலகியல் அறிவை, கொள்ளும்—விற்கும் முறைகளைப் புகட்டிவருவார். இந்தமுறை எண்ணப் படிப்பைக்காட்டிலும் எத்தனையோ மடங்கு வாழ்க்கையில் பயன்படுவதாகும். ஸ்ரீ ராமன் பிள்ளைகளாகிய குசலவர்கள் குருவாசத்தில் செயற்படிப்பு மிகுதியும், சிந்தனைப்படிப்புக் குறைவுமாகப் பயின்றவர்கள்.

இன்னும் எத்தனையோ அரசர்வீட்டுப் பிள்ளைகள் இங்ஙனமே பயின்றனர். பழையகாலத்தைப்போன்ற சந்தோஷமான சமுதாயம் வளரவேண்டுமானால் தேவைகளை மிகுதிப்படுத்திக் கொள்ளாத அடக்கமான வாழ்வு தேவையானால் செயற் படிப்புக்கும் — சிந்தனைப்படிப்பிற்கும் சேர இடங்கொடுப்பதே மேல். இத்திட்டத்தையொட்டியே தஞ்சை சிறைப்பள்ளி நெடுநாளாக நடந்துவருகின்றது. அதில் தெய்வசிந்தனையை வளர்க்க வாரந்தோறும் தெய்வீக பிரசங்கங்களும் நிகழ்ந்து வருகின்றன. மாணவர்கள் வியாழக்கிழமைதோறும் தஞ்சை பெரியகோயில் சென்றுவருகிறார்கள். சிவபுராணம் முதலிய தோத்திரப் பாடல்களைக் கூட்டுப்பிரார்த்தனையாகச் செய்து வருகிறார்கள். இத்தகைய மாணவத்தெய்வங்களின் தெய்வ சிந்தனையை உயர்த்த, தருமபுர ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் செய்தருளிய அருமையான உதவியைப் பாராட்டாமல் இருக்க இயலாது.

சென்றமாதம் 11—6—53ல் தமது பிரசாரவாகனத்தில் திருவையாறு தேவஸ்தானம் கட்டளைவிசாரணை வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களையும், ஆதீன வித்துவானையும், தேவார மாணவர்களையும் அனுப்பி சமயவாழ்வின் சிறப்பைத் தெரிவிக்கச்செய்தார்கள். அம் மட்டோ! திருவாசகம் சிவபுராணத்தை அழகான பளபளப் பான அட்டையோடு அச்சிட்டு ஐந்நூறு மாணவர்களுக்கும் வழங்கினார்கள். அதுமட்டுமா! பட்டுப்பை தைக்கச்செய்து விபூதியோடு அளித்தார்கள். இம்மையின்பமாக — வாய்க்கு இனிப்பான மிட்டாயையும் அள்ளி வழங்கச்செய்தார்கள். இத்தகைய பணிகளையும் இடமறிந்து — காலமறிந்து — தரம் அறிந்து செய்யும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் உதவி தஞ்சைவாசிகளால் பெரிதும் போற்றப்படுதற்குரியதன்றோ? சிறுவர் சிந்தை சிவசிந்தையாகத் திகழச்செய்த பெருமை இவர்களுக்கே உரியது எனப் பாராட்டுகிறோம்.

குனிந்து நிமிரும் பனைமரம்

கரீம்நகர் தாலூகா இந்துபள்ளி கிராமத்தில் பனைமரம் ஒன்று விசித்திரமானமுறையில் நடந்துகொள்கிறது. இது ஒரு ஓடையின் கரையில் இருக்கிறது. இது இரவுவேளையில் குனிகிறது; பகல் வேளையில் நிமிர்கிறது. மாற்றி மாற்றி இம்மாதிரி செய்துவருகிறது. இந்த அதிசயத்தைப் பார்க்க ஏராளமான ஜனங்கள் வந்துபோய்க்கொண்டிருக்கின்றனர். இதையொட்டி ஏராளமான ஐதீகங்கள் கற்பிக்கப்படுகின்றன.

இதைப்பார்ப்பதற்காக தலத்துக்குவந்த ஜில்லா அதிகாரி ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்.—

உண்மையிலேயே இந்த மரம் ஒரே நிதானத்தில் அருகிலுள்ள ஓர் கிணற்றுக்கு நேராகக் குனிவதும், நிமிர்வதுமாக இருக்கிறது. இந்தக் கோடையின் கடும் உஷ்ணத்துக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ எனத் தோன்றுகிறது. ஆனால் கூடவே இன்னொருகேள்வியும் பிறக்கிறது. இதன் அருகிலுள்ள மற்ற பனைமரங்கள் இம்மாதிரி செய்யவில்லை. இது ஆராய்ச்சிக்குரிய விஷயந்தான்! தாவரசாஸ்திர நிபுணர் ஒருவர் இங்கு வரவேண்டும்; இம்மாதிரி விசித்திரமான முறையில் இது இயங்குவதற்கு உஷ்ணம் காரணமாக இருந்தால் இதன் 'ஆட்டத்தை' மழை நிறுத்திவிடவேண்டும்.

—பாரததேவி, 20—6—53.

இன்பம் பெறலாம்

எண்ணார்முத்தம் ஈன்றுமரகதம் போற்காய்த்துக்
கண்ணார்கமுகு பவளம்பழுக்குங் கலிக்காழிப்
பெண்ணோர்பாகா பித்தாபிரானே யென்பார்க்கு
நண்ணாவினைகள் நாடொறுமின்பம் நணுகும்மே.

—சம்பந்தர்.

சேக்கிழாரும் கம்பரும்

(வித்துவான், பாலூர் D. கண்ணப்ப முதலியார் P.O.L.
புதுக்கல்லூரி, சென்னை.)

சேக்கிழார் மாண்பு :

திருவளர்ந்தோங்கும் இப்பரத கண்டத்துத் தெய்வப் புலவர் என்னும் பட்டம் பெற்ற புலவர் சிகாமணிகள் இருவரே. ஒருவர் உலகம் புகழும் உத்தமராம் திருவள்ளுவ நாயனார். மற்றொருவர் சைவமணங்கமழும் சேக்கிழார் பெருமானார். இவ்விரு பெரும்புலவர்கட்கு அமைந்துள்ள பேறு வேறு எப்புலவர்களும் எய்திற்றிலர் என உறுதியாக உரைத்துவிடலாம். இங்ஙனம் கூறுதற்குப் பலகாரணங்கள் உள. ஏனைய புலவர்கள் தனித்துவிளங்கும் நூல்வடிவில் புகழத்தக்க பெருமைபெற்றிலர். அப்புலவர்களின் சிறப்பையும் அவர்கள்யாத்த நூலின் மாண்பையும் புகழும் முகத்தால் சிற்சில தனிப்பாடல்களைப் பாடியுள்ளனர். அவை அவ்வப் புலவர்களின் நூற்களுக்குச் சிறப்புப்பாயிரச் செய்யுட்களாகத் திகழ்கின்றன. அவை தனியன்கள் என்றும் சாற்றப்பெறும். ஆனால் திருவள்ளுவரையும் அன்னார் இயற்றிய நூலின் பெருமையையும் கூறும் தனிநூல் திருவள்ளுவமாலை என்றே திகழ்ந்து வருகிறது. இதுபோலவே, நம் சேக்கிழார்பெருமானையும் இவர் திருவாய்மலர்ந்த பெரியபுராணத்தையும் சிறப்பித்துப் பேசும் தனிநூல் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்பது. இந்தத் தனிப்பெருமையுடன்மட்டும் இப்புலவர் பெருமானார் புகழப்படுதலன்றிக் கொற்றவங்குடி உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் திருவாக்காகச் சேக்கிழார்மீது புராணம் பாடப்பட்டிருத்தலையும் நாம் பாராட்டாமல் இருக்க இயலாது. அப்பெரியார் தண்டமிழ்மேலாந்தர நூல்களாகச் சிலவற்றை விதந்து கூறுகையில் நம் தொண்டர் புராணமாம் பெரியபுராணத்தையும் இணைத்து,

வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்

தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்.

எனப் பாடியும் உள்ளார். மேலும் சேக்கிழார் மாண்பினை உணர அவாவுவார் சேக்கிழார் புராணத்துள்ளும், சேக்கிழார் பிள்ளைத்தமிழிலும் பரக்கக் காணலாம்.

வடநூற்கடலும் தென்னூற்கடலும் ஒருங்கே கடந்து அறிவுமயமாய்த் திகழ்ந்த சிவஞானமுனிவர் தம்வாயார,

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கினுல் சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கியப் பயனுப் பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சிந்தை இருத்துவாம்.

எனப்பாடிப் பரவியுள்ளார். மற்றும் சேக்கிழார் பெருமை பலவாகும். இவரது நுண்ணறிவுத்திறன் காண விரும்புவோர் இவர் பாடியுள்ள பெரியபுராணத்தில் கண்டுதெளிவாராக. இவர்கள் வாழ்ந்தகாலம் அனபாயச்சோழனுகிய இரண்டாம் குலோத்துங்கன் காலம். அதாவது கி. பி. 1123 முதல் 1148 வரை அவன் அரசு புரிந்தகாலமாகும். மேலும் தெற்றத் தெளியக் கூறப்புகின் கி. பி. 12-ம் நூற்றுண்டு எனலாம். இதனை மேலும் விரிவுபடுத்த வேண்டுவதின்று. வேண்டுவோர் வரலாற்று ஆராய்ச்சியில் கண்டுணர்வார்களாக. இனிக் கம்பரது பெருமையைச் சிறிது பார்ப்போமாக.

கம்பர் பெருமை.

கம்பர் ஒரு சிறந்த கவி. "கல்வியில் சிறந்தவர் கம்பர்". "கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்". "கம்பநாடன் கவிதையைப் போல் கற்ருேர்க்கு இதயம் களியாதே" என்பனபோன்றவை கம்பர் பெருமை விளக்கவந்தவைகளே. இத்துணை புகழ்உரைகளும் உண்மை உரைகளே அன்றிப் புனைந்துரைகள் அல்ல. உண்மையாகவே கம்பரது கவிகள் அத்துணையளவு சுவை பயக்கவல்லவைகளாக உள்ளன. கம்பரையே சில அறிஞர்கள், "ஐய! புலவர் மணியே! உமது

கவிகள் மிக்க நயமுடையவைகளாகவும் சுவையுடையன வாகவும் உள்ளனவே; இன்னதற்குக் காரணம் உளதோ" என வினவினர்களாம். அதுபோது கம்பர் "என் கவிகள் சுவையுடையனவாய் இருத்தற்கு யான் காரணன் அல்லேன். ஒவ்வோர் அகப்பை அள்ளிக்கொண்டேன். அதாவது எனக்கு முன்பு இருந்த புலவர் பெருமக்களின் சொற்களையும் தொடர் களையும், கருத்துக்களையும் அப்படியே எனது நூலில் அமைத்துப் பாடியுள்ளேன். இதுவே என் கவிகள் சிறத் தற்குக் காரணமாகும்' என்றனராம். இஃது உண்மை என்று உறுதிப்படுத்தற்குத்திருமணம், செல்வக்கேசவராயமுதலியார் எம். ஏ. (பச்சையப்பன் கல்லூரி முன்னாள் தமிழ் விரிவுரை யாளர்) எழுதியுள்ள **"கம்பர்"** என்னும் நூலே சான்றாகும். அதில் பல தலைப்புக்களைக் கொடுத்து எழுதிய அறிஞர், கம்பர் பயின்ற நூற்கள் இன்ன எனக் குறிப்பிடுகையில் தொல்காப்பியம், சங்க நூற்கள், நாலாயிரப் பிரபந்தங்கள் என்று குறிப்பிடுவதோடமையாது **சைவத்திருமுறைகளும்** அன்னார் பயின்ற நூற்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அறிஞர் செல்வக்கேசவராய முதலியார் திருமாலிய (வைணவ) மரபினர். அன்னார், கம்பர் சைவநூல்களையும் பயின்றனர் என்று குறிப்பிட்டது நினைவுகூர்தற்குரிய செய்தியே ஆகும். எனவே, கம்பர் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தினையும் நன்கு பயின்றவர். பயின்றதோடு நில்லா மல் பற்பல அரிய சொற்களையும், தொடர்களையும், கருத்துக் களையும் அப்பெரு நூலினின்றும் கல்லி எடுத்து மிகமிகப் பொருத்தமான இடங்களில் அமைத்துத் தம் நூலில் பாடி யுள்ளார் என்பதை அறிவிப்பதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

கம்பர், சேக்கிழார் பெருமானரது காலத்திற்குப் பிந்தியவர். கம்பர், இரண்டாம் இராஜராஜ சோழர் காலத் தவர். அதாவது கி. பி. 1171 முதல் 1178-ம் ஆண்டுவரை வாழ்ந்த் அரசர் காலத்தவர். முன்பு சேக்கிழார் காலம் குறிப்பிட்டிருப்பதையும், ஈண்டுக் கம்பர் விளங்கிய காலத் தைக் குறிப்பிட்டிருப்பதையும் உற்று நோக்கினுல் கம்பர்

பிற்பட்டவர் என்பது நன்கு விளங்கும். மேலும், "காவலன், மண்ணில் கடலில் மலையில் பெரிது என் என எண்ணி எழுதிக்கொடுத்த ஏற்றகை" எனக் கம்பர் பாடியதாகக் கூறப்படும் திருக்கைவழக்கநூல் சாற்றினாலும் கம்பர் சேக்கிழாருக்குப் பிற்பட்டவராதல் தெளிவாகும். இன்னமும் இதனை விரித்துக் கூறவேண்டா என இத்துடன் நிறுத்தி மேலே எடுத்துக்கொண்ட பொருளினை இனிது விளக்குவோமாக.

சேக்கிழார்பெருமான் இறைவன் தமக்கு 'உலகெலாம்' என்று எடுத்துக்கொடுத்த தொடரையே மகுடமாக அமைத்து

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

எனப் பாடியருளினர். இங்ஙனமே கம்பரும் தமது நூலின் துவக்கத்தினை,

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

என்று அமைத்துக்கொண்டனர். இவ்வமைப்பில் ஒற்றுமைகள் பல உள. அவற்றுள் தலைசிறந்தது சேக்கிழார் எந்தக் கலிவிருத்தயாப்பில் செய்யுளைப் பாடினரோ அதிலேயே கம்பரும் பாடி அமைத்திருப்பதேயாகும்.

சேக்கிழார்பெருமான் தம் நூலிற்குத் திருத்தொண்டர் புராணம் எனப்பெயர் சூட்டியதோடு நில்லாமல் மாக்கதை என்னும் திருநாமத்தையும் பேசியுள்ளார். அங்ஙனமே கம்பரும் தம்நூலுக்கு இராமாவதாரம் என்றபெயர் சூட்டிய தோடு அமையாது தோமறு மாக்கதை என்றும் குறிப்பிட்டிருப்பதை உணர்வோமாக. இவ்விருபுலவர்களும் தாம்தாம்

H08

பாடும் நூற்களை ஆசையுடன் பாடத்தொடங்குவதாகக் கூறுகின்றனர். முன்னர் கூறியவர் சேக்கிழார். "அளவில் ஆசை துறப்ப அறைதுவேன்" என்பது சேக்கிழார் வாக்கு. பின்னவரான கம்பர் "ஆசைபற்றி அறையலுற்றேன்" எனப் பாடி மகிழ்கிறார்.

தொண்டர் சீர்பரவுவார் தம் ஆசையின் பெருக்கத்தினையும் ஆர்வத்தின் விரிவையும் ஓர் உவமைமுகத்தால் வைத்துப்பேசுகையில் 'பெருகு தண்கடல் உற்றுண் பெருநசை ஒருசுணங்களை ஒக்கும் தகைமையேன்' என மன மூவந்து பகர்ந்துள்ளார். இம்முறையில் தாமும் அமைய வேண்டும் என்று எண்ணிய கம்பநாடரும், 'ஓசைபெற்றுயர் பாற்கடல் உற்றொரு பூசை முற்றவும் நக்குபு புக்கென' எனத் தாம் இசைத்துள்ளார். முன்னவர் கூறியதில் நாய் உவமையாக வந்துள்ளது. பின்னவர் பாடியதில் பூனை எடுத்துக் காட்டாக இயம்பப்பட்டுள்ளது.

சேக்கிழார் காவிரியாற்றைப்புகழ்ந்து உவமைதருகையில் செவிலித்தாயைக்குறிப்பிட்டுள்ளார். இதனை 'செய்யபூமகட்கு நல் செவிலி போன்றது' என்னும் அடிகளில் காணலாம்' இங்ஙனமே கம்பரும் சரயுநதிக்கு உவமை பேசுகையில் 'சரயு என்பது தாய்முலை அன்னது' என்றனர். செவிலி என்பாள் வளர்த்ததாய். தாய் என்பாள் பெற்றதாய். இவ்விருதாயரும் தாய்மைப்பண்பில் ஒரு மனப்பான்மையுடையவரே. ஆகவே நதிக்கு இவ்விரு உவமைகளும் பொருத்தமானவைகளே.

சேக்கிழார்பெருமான் சோழமன்னனது அரசியல்மேம்பாட்டைப் புகழ்ந்துகொண்டுவருகையில் அவனது நாட்டில் அமைந்த செங்கோன்மைகாரணமாக விலங்குகள் தமக்குள் பகைமையின்றி வாழ்ந்தன; பறவைகள் தமக்குத் தான்யம் இன்மைகாரணமாக வேற்றுநாட்டகம் புகாது சோழ நாட்டகத்திலேயே வாழ்ந்துவந்தன என்னும் கருத்துக்களைச் சேக்கிழார் "நீதியபுள்ளும் மாவும்" என்று சுருங்கக்கூறி விளங்கவைத்தனர். இவ்வாறு புலவர் பெருமானார் புகன்ற

தன் நுண்பொருளை நன்கு உணர்ந்த கம்பர் தம்நூலில் தசரதன் அரசியல் மேம்பாட்டைக் கூறுகையில்,

"வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசியர்
உள்ளமும் ஒருவழி ஓடநின்றவன்"

என விதந்துகூறினர். நீதியபுள்ளும் மாவும் என்று சேக்கிழார் கூறிய தொடருக்குக் கம்பரது வாக்கு ஒரு விளக்கம்தருவதாக அமைந்திருப்பதை அறிஞர்கள் ஊன்றிச் சிந்திப்பாராக.

திருநீலகண்டர் வரலாற்றில் நடுநாயகமாக விளங்கும் சீரிய நிகழ்ச்சி திருநீலகண்டநாயனர் தம்வாழ்க்கைத்துணைவி யாரிடம் உறுதி கூறிய கருத்தாகிய 'எம்மை என்றதனல் மற்றைய மாதரார்தம்மை என்றன் மனத்தினுந் தீண்டேன்' என்றபண்பினை, கம்பர் தம்நூலில் ஏற்றஇடத்தில் வைத்துப் பாடவேண்டும் என்றுகருதி அதற்குரிய இடங்களை நாடிக் கொண்டுவர அவர்க்கு ஓர் இடம் கிடைத்தது. அதுவோ அனுமனும் சீதையும் பேசிக்கொண்ட இடமாகும். அப் பேச்சில் சீதை இராமனிடம் அறிவிக்குமாறு அனுமனுக்குக் கூறுகையில்,

வந்தெனைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்தவிப் பிறவிக் கிருமாதரை
சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம்
தந்தவார்த்தை திருச்செவி சாற்றுவாய்

என்று செப்பியதாகும். சேக்கிழாரது தொடரான மனத்தினுந் தீண்டேன் என்பதும், கம்பரது வாக்கான சிந்தையாலும் தொடேன் என்பதும் எத்துணைப்பொருத்தமாக இருக்கிறது பாருங்கள்.

இலக்குவன்தாயாகிய சுமத்திரையென்பாள் இலக்குவ னுக்கு அறிவுறை கூறி இராமனிடம் கானகத்தில் எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டும் என்று கூறுகையில்,

ஆகாததன்ருல் உனக்கவ்வனம் இவ்வயோத்தி
மாகாதல் இராமன் நம் மன்னவன் வையம் ஈந்தும்

போகா உயிர்த்தாயர் நம் பூங்குழல் சீதையென்றே
ஏகாய் இனி இவ்வயின் நிற்றலும் ஏதம் என்றாள்.

என்று பாடியுள்ளார். இங்குக் கம்பர் "இவ்வயின்நிற்றலும் ஏதம்' என்றதன் குறிப்பு இவ்வளவுநேரம் தாமதம்செய்தல் கூடாது; இராமன் காடுநோக்கிப்புறப்படுவதற்கு முன்சென்று வழிகாட்டியாகச் செல்ல வேண்டும் என்னும் விரைவினைக் காட்டுவதாகும். இந்த விரைவு குறிக்கும் கருத்தினைக் கம்பர் யாண்டுப்பெற்றார் எனில் சேக்கிழார்பெருமானார் நூலில் பெற்றார் என்றால் அது மிகையாகாது.

இயற்பகைநாயனார் புராணத்துள் நாயனார், தம்வாழ்க்கைத் துணைவியாரை வந்த சிவனடியார்க்கு ஈந்துவிட்டனர். சிவனடியார் தம் செல்லாற்றில் சுற்றத்தாராலும் மற்றவராலும் தமக்குத் தீங்குவராதிருக்கும்பொருட்டுத் துணையாக இயற்பகையாரை வருமாறு வேண்டுகின்றார். அதுபோது நாயனார்விரைந்து நின்றசெயலை சேக்கிழார் குறிப்பிடுகையில்,

நின்றது பிழையாம் என்று நினைந்து வேறிடத்துப் புக்குப்
பொன்திகழ் ஆறுவை சாத்திப் பூங்கச்சுப் பொலிய வீக்கி

எனப் பாடிக் காட்டினர். இங்கு "நின்றது பிழையாம்" என்னும் தொடரே கம்பரது நினைவிற்கு "இவ்வயின் நிற்றலும் ஏதம்" என வந்து அவர் நூலில் இடம்பெறலாயிற்று.

கண்ணப்பநாயனார் புராணத்துள் திண்ணனார் வேட்டையாடும் சிறப்பைச் சிறப்பிக்குங்கால், யானையும் சிங்கமும் கண்ணப்பர் கடுங்கணைபட்டு ஒருங்கே சாய்வதை உவமை கூறுகையில் "இரவொடு பகல் அணைவன என மிடையும் அவ்வனமே" எனக் கூறினர். கரியின் நிறத்திற்கு இரவு உவமையும் அரியின் நிறத்திற்குப் பகல் உவமையும் ஆக நின்றன. இந்த உவமையினை ஏற்ற இடத்தில் அமைக்க எண்ணிய கம்பர், யுத்த காண்டத்தில் விபீடணனும் சுக்ரீவனும் ஒருவரை ஒருவர் தழுவிநின்ற நிலைமைக்கு உவமை காட்டி மகிழ்வுற்றார். "இருவரும் ஒருநாள் உற்ற எல்லியும்

பகலும் போலத் தழுவினர் எழுவின் தோளார்" என்பது கம்பரது பாடல். சுக்ரீவனுக்குப் பகலும் விபீடணனுக்கு இரவும் உவமைகள் ஆயின. விபீடணன் கரியன்; சுக்ரீவன் செவ்வியன்; ஆகவே, உவமைகள் இவ்விருவர்க்கும் உகந்தவைகளாகவே அமைந்தன. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணத்துள்,

" கேட்டவப் பொழுதே சிந்தை கிளர்ந்தெழு மகிழ்ச்சிபொங்க
நாட்பொழு தலர்ந்த செந்தா மரைநகைமுகத்த ராகி"

என்னும் இவ்வடிகளே,

" இப்பொழு தெம்மனோரால் இயம்புதற் கெளிதே யம்மா
செப்பரும் குணத்திராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்புஅவ் வாசகம் உரைப்பக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா"

எனக் கம்பர் தமது இராமனது திருமுகப் பொலிவுக்கு, "அப்பொழுது அலர்ந்த செந்தாமரை" என இப்பாட்டில் இணைத்துப் பேசிக்கொண்டார் எனில் இது பொருத்தமே ஆகும். இதே புராணத்தில் பூம்பாவையார் எழிலினைப் பேசுகையில் சேக்கிழார் "ஓவியர்க்கு எழுத ஒண்ணுப் பாட்டொளி ஒளிர்வுற்றேங்க" எனக் குறிப்பிட்டனர். இக்குறிப்பு நினைவிற்கு வந்தே கம்பர் இராமனது அழகை வாலியின் வாக்கில் வைத்துப் புகழ்கையில் "ஓவியத்தெழுத ஒண்ணு உருவத்தாய்" என்று உரைக்குமாறு செய்தது.

கம்பர் சொற்பொருளின் ஆழத்தினை நன்கு சிந்திப்பதில் வல்லுநர். எளிய சொல்லாயினும் அது இடத்திற்கு ஏற்ப அமையப்பெறின் அது அரிய சொல்லே - சீரிய சொல்லே என்பது கம்பரது துணிபு. திருஞானசம்பந்தர் புராணத்தில் ஆளுடைய பிள்ளையார் காளத்தியப்பரைக் கும்பிட்டதன் பயனகக் காளத்தி வேடராம் கண்ணப்பரைக் கும்பிடும் பேறு பெற்றுர் என்பதை அழகுறக் குறிப்பிடுகையில் "கும்பிட்ட பயன் காண்பார்போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்" எனப் பாடி உளம் பூரித்தார். ஈண்டு

412

வீழ்ந்தார் என்னும் சொல் பாலறாவாயருக்குக் கண்ணப்ப நாயனாரிடத்து அமைந்த அன்பின் பெருக்கை அறிவிப்பதாய் விரைந்து பணிந்து வணங்கிய பண்பாட்டை விளக்கிநிற்கிறது. இதன் ஆழ்ந்த பொருளை அறிந்த கம்பர் தாமும் அவ் "வீழ்ந்தார்" என்னும் மொழியின் வேகத்தைத் தம் நூலில் பொருத்தமான இடத்தில் வைத்துப் போற்ற விழைந்து, விபீடணன் இராமனைக் கண்டு வணங்கும்போது அவனது அன்பின் மேம்பாட்டை அறிவிக்க, "வாரங்களின் வாரியன்ன தாளிணை வந்து வீழ்ந்தான்" எனப்பாடி அகங்களித்துள்ளார் என்பதை அறியின், கம்பருக்குச் சேக்கிழார்பெருமான் கவியினிடத்து எத்துணை ஈடுபாடும் அன்பும் ஆர்வமும் இருந்தன என்பதை அறிஞர்கள் பாராட்டாமல் இருக்க இயலாது.

கம்பர் தமது கோசலநாட்டுக் காதலர் அன்பின் திறத்தினைப் பலபடப் பாராட்டிப் பாடி வருகின்ற காலத்து நகைச்சுவையைத் தரத்தக்க நிலையில் "உதைபடச் சிவப்பன உரவுத் தோள்களே" என்று களிப்புத்ததும்பக் கவி புனைந்தனர். அதாவது ஊடற்காலத்துக் காதலிமார் உதைத்த உதைகளைப் பெற்றுக் காளையர் தோள்கள் சிவந்துபோயின என்பதாகும். இந்தச்சீரிய கருத்துச் சேக்கிழார்பெருமானார் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் திருப்பெருமங்கலமாம் திருப்பதியில் வாழும் காதற்றம்பதிகளைச் சிறப்பித்துப்பேசிய,

"நஞ்சு சூழ்வன நயனியர் நளிளமெல் லடிச்செம்
பஞ்சு சூழ்வன காளையர் குஞ்சியின் பரப்பு"

என்னும் பாட்டின் கருத்தே அன்றோ. இக்கருத்தினைக் கொண்டேயன்றோ கம்பர் "உதைபடச் சிவப்பன உரவுத் தோள்களே" என்று பாடிக்கொண்டனர். காதால் கேட்டற்கும் சகிக்க ஒண்ணாத வார்த்தைகளைக் கேட்கும் சந்தர்ப்பமும் வாய்க்கப்பெறின், அவ்வார்த்தைகளின் கொடுமையினை விளக்கி நல்ல உவமை கூறவேண்டுவது கவிகளது திறனே ஆகும். அந்த முறையில் சிறுத்தொண்டரிடம் வந்த

வைரவர் தாம் கூறப்போகும் செய்தி கடுமையானது என்பதை முன்பே அறிவிப்பான்வேண்டி அதனை நல்ல உவமை வாயிலாக,

" புண்செய் நோவில் வேல்எறிந்தாற் போலும்
புகல்வ தொன்றெனன்றார் "

எனக் கூறினர்.

துன்பந் தருதற்கு இதைவிடச் சிறந்த உவமை காட்டல் அரிது. இந்த உவமையின் பொருட்பொலிவினைக் கம்பர் உணர்ந்து தமது நூலில், விசுவாமித்திரர் தசரதனிடம் இராமனை வேண்டியபோது, அவ்வேண்டுகோள், தயரதனுக்கு எவ்வாறு இருந்தது என்பதை விளக்க,

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்
எனச்செவியில் புகுத லோடும்

என்று சிறிது மாற்றி அமைத்துக்கொண்டனர்.

இங்ஙனம் பல்லாற்றானும் கம்பர், சேக்கிழார் பெருமானார் கவிகளில் ஈடுபட்டு அக்கவிகளின் கருத்துக்களையும் தொடர்களையும், சொற்களையும் தம் நூலில் ஆங்காங்கு ஏற்ற இடங்களில் அமைத்துப் பாடித் தம் நூலினைச் சிறக்கச் செய்துள்ளார். இங்கு யான் எடுத்துக்காட்டிய இடங்கள் மட்டுந்தான் கம்பரது கருத்தைப் பிணித்தன எனக்கருத வேண்டாம். பற்பல இடங்கள் இன்னும் உள. அவை யாவும் எழுதப்புகின் இவ்வேடு இடந்தராதென இத்துடன் நிறுத்தப்பட்டது.

வாழ்க சேக்கிழார் கவிகள் !

வளர்க கம்பன் கவிகள் !!

414.

பிழை கணித்தல்

புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,
(தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.)

பண்டைய செந்தமிழ்ச் சொற்கள் பலவற்றின் உண்மைப் பொருளை இக்காலத்தில் அறிதல் அரிதாயுளது. அதற்குப் பலகாரணங்கள் உள. அவற்றின் செம்பொருளைநாடி அறிய முயறல்வேண்டும். முயலாதுவிடினும் அறியமுடிந்திலது என்று அமைதல்வேண்டும். நம் அறிவிற்குத் தோன்றிய தொன்றனைச் செம்பொருளாகக்கொண்டு கூறுதல் பிற்றை ஞான்று ஆராயும் பெற்றியரைப் பிழைபட்ட நெறியிற் செலுத்துதல் முதலிய பல குற்றங்களை நேர்விக்கும்.

தமிழ்ச் சொற்களும் தொடர்களும் வழக்கில் அடிப்பட்டு மருவிப் பழைய வடிவு திரிந்து வேற்றுவடிவைப் பெற்று நிற்கின்றன. அவற்றின் பொருளுணர்ச்சியில் விரைவும் துணிவும் கொள்ளல் ஏற்றதன்று. ஏழில், தோழம் என்ற இரண்டு சொல்லின் உண்மையை முதன்முதலில் வெளிப் படுத்தியுள்ள என்பெயரைக் குறிக்காமல், தாமே கண்டவாறு பிறர்கருதத் தம் உரையிற்பெய்த பேராசிரியரும் பிறரும் நன்றியறிதலை உடையவர்கள்.

பேழ்கணித்தல் என்பது மரூஉவின்பாற்பட்டதொரு தொடராகும். இதன் உண்மையும் முதன்முதல் என்னால் வெளிப்பட்டது. இது பலர்க்குந் தெரிந்தது.

பேழ்கணித்தல் என்பது முன்னோர் பழக்கங்களுள் ஒன்றனைக் குறிக்கும் தொடர். அது பண்டுவழக்கிலிருந்தது. இப்போது எவரும் வழங்கக்காண்டலில்லை. நூல்களில் இது பேழ்கணிப்பு, பேகணிப்பு என்றும் காணப்படுகின்றது. கணித்தல் கணிப்பு என்னும் குறித்துவருகிளவிக்குத் திரிபு சிறிதுமில்லை. நிறுத்தசொல்லே திரிபுற்றது. பேழ் என்பது பிழை என்பதன் திரிபாகக்கருதப்படுகிறது. அது கணித்தல் என்னுஞ் சொல்லொடும் இயைந்தபின்னர்த்தான் பேழ் என்று

திரிந்தது. தனிமொழியாக வழங்கின் வேறுவகைத் திரிபை அடையும். தொடர்மொழியிற்பிழை என்பது பேழ் என்றுதல் இயல்பே. இதுபோற் பிறழ்வாய் என்பது பேழ்வாய் என்று மருவுதலிற் பிறழ் என்பதன் திரிபு பேழ் ஆதல் இதனின் வேறு. அதுபற்றிய ஆராய்ச்சி ஈண்டில்லை. புழைக்கை - பூழ்க்கை (யானையின் துதிக்கை), பழங் - (பழைய) கிணறு பாழ்ங்கிணறு, விழைந்தான் - வீழ்ந்தான், முழுகினன் - மூழ்கினன், விழுந்தான் - வீழ்ந்தான், விழுது - வீழ்து, வீது. பொழுது - போழ்து போது, அழுந்து - ஆழ்ந்து என்பவற்றை ஈண்டு நோக்குக.

பிழைகணித்தல் என்பது அறிஞர் சிற்சிலர் தம் பழக்கமாக்கொண்டொழுகிய நற்பண்பைக் குறிப்பது. உலகில் எவரும் அன்றுடம் தாம் செய்த பிழைகளை உறங்கச்செல்லுமுன் கணித்து (எண்ணி - கணக்கிட்டு) வந்து, நாளடைவிற் பிழைசெய்யாப் பெருந்தகைமையை அடையக்கடவர். அச் செயல்வாய்ப்பது அரிதாம். ஆதலின், எல்லோர்க்கும் இயல்வதொன்றன்று. அவ்வருஞ்செயல்புரிந்த பெரியாருள் அருட் செல்வராகிய திருநாவுக்கரசு நாயனாரும் ஒருவராவர். அப் பெருமானார் நாடோறும் திருப்பள்ளியிற்கண்படைகொள்ளு முன்பு தாம் செய்த பிழைகளைக் கணித்துவரும் பழக்கம் உடையவராயிருந்தருளினார் என்பதனை,

" அரிதிற் றிறக்கத் தாம்பாட அடைக்க அவர்பா டிய எளிமை
கருதி நம்பர் திருவுள்ளம் அறியா தயர்ந்தேன் எனக்கவன்று
பெரிதுமஞ்சித் திரும டத்தில் ஒருபா லணைந்து பேழ்கணித்து
மருவு முணர்விற் றுயில் கொண்டார் வாய்மை திறம்பா வாகீசர் "

எனத் தெய்வச் சேக்கிழார்பெருமானார் திருவாய்மலர்ந்தவாற் றான் இனிதுணர்க.

இத்திருப்பாட்டில், 'வாய்மை திறம்பா' என்ற அடையால் வாகீசமுனிவர் பிழை கணிக்கும் வாய்மையிலும் திறம்பாதவர் என்பதும், அறியாதயர்ந்தேன் என்றதால் அன்று நேர்ந்த 'யாழைப் பழித்த மொழியம்மை'யின் பண்ணின்பம்

H1b

உண்ட இறைவனது செவ்வியறியாத பிழையைக் கணித்தார் என்பதும், 'கவன்று', 'பெரிதும் அஞ்சி' என்றவற்றால் கவலையும் அச்சமும் பெரிதுற்றார் என்பதும், 'பேழ்கணித்து மருவும் உணர்விற் றுயில்கொண்டார்' என்றதால் 'பிழை கணித்தமையாலே ஒருபுத்துணர்வு மருவிற் றென்பதும், அவ் வுணர்வொடும் துயின்றார் என்பதும் இனிதுணர்தல்கூடும்.'

"பிழைத்துச் செவ்வியறியாதே திறப்பித்தேனுக்கு" என்று பின்வருவதும் பிழைகணித்த உண்மையையும் பிழையையும் உணர்த்துதல் காண்க.

> "எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
> மற்றன்ன செய்யாமை நன்று."

என்றபடி பின் தானே இரங்கும் வினைகளை ஒருகாலும் செய்தலாகாது. ஒருகால் மயங்கி அவைகளைச் செய்யுந் தன்மையன் ஆனானாயின், பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யாதொழிதல் நன்று. என்செய்தோம் என்று பின் தானே இரங்குவனவற்றைச் செய்தலும், செய்ததற்கு இரங்கலும் உடையவன் வீண்பொழுது போக்குவானாவன். செய்தலும் இரங்கலுமே அவன் தொழிலாயிருக்கும். இருப்பினும் செய்து இரங்காதவரினும் அவன் சாலச்சிறந்தோனாவன். அவ்விரங்குவோனினும் சிறந்தோர் கழிவிரக்கங்கொள்ளாத கற்றோர். செய்திரங்குவான் அச்செய்கையால் உண்டாகின்ற தீங்கினின்றும் நீங்கும் வழியை அறியான். நெஞ்சுறுதியில்லாதவனும், பயனில்லாதவற்றைச் செய்கின்றவனும் தன் பழியைத் தானேகூறி வெளிப்படுத்துபவனும் ஆவன். இந் நிலையால் எல்லாராலும் எள்ளப்படுவான். இவ்விகழ்ச்சியின் நீங்கிப் புகழ்ச்சி எய்த விரும்பும் எவரும் பிழைசெய்யாதிருக்கவும் செய்ததற்கு இரங்காமல் செய்த பிழைகளைக் கணித்துக் குறைத்துக்கொண்டேவந்து, பிழையே செய்யாப் பெருந்தகைமையைப் பெறவுங்கடவர்.

அறிவும் மானமும் இலர் என்று உலகத்தார் எள்ளும் இகழ்ச்சி தமக்குண்டாதல் கூடாது என்று உள்ளும் அறிஞர்

பிழைகணித்தலைப் பெரியதொரு நற்பழக்கமா மேற்கொண்டு ஒழுகுவர். அவ்விகழ்ச்சியை அஞ்சாதவர் பிழைகணித்தலா லாகும் பெருநலம் உற வேறு வழியில்லை. பிழைகளைக் கணித்துவந்து குறைத்தலே உயிர்க்குத் தூய்மை பயக்கும். இன்றேல், உயிர் தூய்மையை அடையாது; வீடுபெறாது. வினைத்தூய்மையுடையவரே வீடுபெறத்தக்கவர். வினையும் மொழியும் நினைவும் தூய்மையுற உடலும் நாவும் உள்ளமும் செவ்வையானநிலையில் இருத்தல்வேண்டும். இன்றேல் மெய் மையும் வாய்மையும் உண்மையும் எய்தமாட்டார். அவற்றை எய்தலில்லாதவர்க்கு அவற்றான்வரும் வீடுபேறு கிட்டாது என்பது ஒருதலை.

"தூய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்."

மாணிக்கவாசகப் பெருமானாரும் பிழைகணித்தல் என் னும் இத்தொடரை இப்பொருளிலேயே ஆண்டிருத்தலை நோக்கின், அவ்வுயரிய பழக்கம் அவர்கண்ணும் இருந்தமை புலப்படும்.

"நிற்பார் நிற்க நில்லாவுலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பா லொப்பாந் திருமேனிப்
புயங்க னாள்வான் பொன்னடிக்கே
நிற்பீ ரெல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே யொருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
பெறுதற் கரியன் பெருமானே"

என்னும் திருவாசகத்தை அறிக. பிற்பால் நின்று பிழை கணித்தல் சிவப்பேற்றை எய்துவிக்காது என்ற நுட்பத்தை அறிஞர் ஆராய்தல்வேண்டும். சுந்தரமூர்த்தி நாயனாரும்,

"பிறையணி வாணுதலா ளுமையாளவள் பேழ்கணிக்க
நிறையணி நெஞ்சனுங்க நீலமால்விடம் உண்டதென்னே"

என்று அருளியிருத்தலால், பிழைகணித்தலும் பேழ்கணித்தல் என்ற வழக்கும் அவர்கள்காலத்தும் இருந்தமை புலப்படும்.

இறைவன் நஞ்சுண்டமைகண்டு இறைவி ‘அந்தோ யாம் என்ன பிழைசெய்தோம்? இவர் நஞ்சினை உணவாக்கொண்டு என்றுமில்லாத ஒரு நிலையை எய்தத் துணியும் அளவிற்கு’ என்று பிழை கணித்ததும் நிறையைப் பூணுக்கொண்ட நெஞ்சம் வருந்தியதும் ஆளுடையநம்பிகள் அறிவித்தருளிய நயம் பாராட்டற்பாலது. ஈண்டுப் பேழ்கணிக்க என்பது தன் பொருளைச் செவ்விதின் தோற்றுதலை உணர்க.

“பொசியாதோ கிழ்க்கொம்பு நிறைகுளம்என் றதுபோலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச் சிவபெருமா னேஎனினும்
இசையாணுல் என்திறத்தும் எனைஉடையாள் உரைஆடாள்
நசையானேன் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே”

என்றருளிய வேணுட்டடிகள் திருவாக்கிலும் ‘பேழ்கணித்து’ என்று தனக்குரிய பொருளில் வந்திருத்தல் அறியத்தக்கது.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் (9, 4, 3.) ‘பிழைக்கின்ற தருளென்று பேதுறுவனே’ என்பதனுரைகளுள்ளே, இருபத்துநாலாயிரப்படிகாரரும், ஈடுகாரரும், ஆளவந்தார் அருளிச்செயலாக, ‘வரையாதே ரட்சித்த அந்த மகாகுணம் எனக்கு உதவாமையாலே பிழைக்கப் புகாநின்ருய் (இழக்கப் புகாநின்ருய் என்றும் பிறிதோரிடத்திலுள்ளது) என்று பேகணியா நின்றேன்’ என்றதும்,

“புன்கண்மை யெய்திப் புலம்பி யிராப்பகல்
என்கண்ண னென்றவன் காட்கரை யேத்துதுமே”

என்ற திருவாய்மொழிப் பகுதியில் (9, 6, 6.) ‘புன்கண்மை’ என்றதற்கு உரையாகப் ‘பேகணிப்பு’ என்றதும் ஈண்டு நோக்கத்தக்கன. ‘பேதுறுவன்’ என்றதற்குப் பிறர் ‘அஞ்சாநின்றேன்’, ‘கலங்கா நின்றேன்’, ‘நோவுபடா நின்றேன்’ எனக் கூறினர். ஆளவந்தார் சுவாமிகள் ‘பேகணியா நின்றேன்’ எனத் தாற்பரியப்பொருள் கூறியருளினுர்கள். அது மிக்க பொருத்தமுடையது. உலகில் எவர்க்கும் தம்பாலுள்ள

பெருவழக்கமும் பழக்கமும் எவ்வாற்ருலும் வெளிப்பட்டே தீரும். 'அவ்வியல்பால் புன்கண்மை' என்றதற்குப் 'பேகணிப்பு' என்று உரைகண்டதன் அருமையை அறிந்து மகிழ்வோர் ஆளவந்தார்சுவாமிகளை மறவாது போற்றியுய்வர்.

இராப்பகலாப் புலம்புதற்கேதுவாய் நின்றது துக்கம். அத்துக்கம் பிழைகணித்தலான காரணத்தின்வந்த காரியம். பிழையைக் கணிக்கும்போது, செய்த பிழைக்கு வருந்தியே தீர்வர். தீர்ந்தாற்ருன் பிழை செய்யும் பழக்கம் ஒழியும். பேரறிஞர் வருந்தாமலும் பின்னர்ப் பிழைக்காமலும் நிற்க வல்லவராவர். எல்லோர்க்கும் அஃது இயலுவதன்று. இவற்றை நன்குணர்ந்த திவ்வியபிரபந்த வியாக்கியானகருத்தர்கள் புன்கண்மையைப் பேகணிப்பு எனக்கொண்டு துக்கம் எனக் குறிப்பும் எழுதியருளினுர்கள். 'சோதானவாருயிர் பேகணிக்கும்போது மீளவும் உயிர்ப்பு எய்ய வேணுமிறே' என்றும் 'விசாரப்ரகாரம்' என்றும் எழுதியருளியவற்றை உய்த்துணர்தல்வேண்டும். நம்மாழ்வார்க்கும் வியாக்கியான கருத்தர்களுக்கும் பிழைகணித்தலாகிய நற்பழக்கமும் உற்ற இடத்தில் அப்பழக்கத்தை வெளியிடும் வழக்கமும் இருந்தமை வெள்ளிடைமலை. இன்றேல் 'பேதுறுவன்' 'புன்கண்மை' என்ற இடத்திற் பிழைகணித்தல் என்பதை நினைக்கக் காரணம் யாதுமில்லை. சொற்பொருள் கோடற்குப் பழக்க வழக்கங்களும் தக்க துணையாக நிற்றலை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

திருவிருத்தம் 99 பாட்டுரையுள் 'பேழ்கணித்து நின்ற நிலை' என்றுள்ளதையுங் காண்க.

பேழ்கணித்தல் என்றதன் தொல்லுருவத்தை ஆராயாமையால், திருமுறைகளுள் அச்சொல் அமைந்த இடத்திற் பொருந்தாவுரை கொள்ளல் நேர்ந்தது. (செந்தமிழ்த் தொகுதி 7, பக்கம் 50. பார்க்க)

'பேழ்கணித்து' என்பதைக் கம்பரும் ஆண்டிருக்கின்ருர். ஓரிடத்தைக் குறிப்பாம்.

கொடிய விலங்கினமும் இராமலக்குமணரை நோக்கி நிற்கின்றன. மக்களினத்துக்குத் தாம் செய்யும் பிழைகளைக் கணிக்கின்றன. இராமலக்குமணர் திருவுருவத் தோற்றம், அருளேக்கம் முதலியன விலங்குகளையும் வயப் படுத்தி விட்டன. அவற்றின் உள்ளத்தை உருக்கின. சிங்கம் புலியானை முதலிய அக்கொடுவிலங்கினத்திற்கு அவ்விருவரும் எதிர்ப்பட்ட போழ்தில், அவை இம்மானிட சிரேட்டர் அருளே உருக்கொண்டு வந்தவராக விளங்குகின்றனர். இவர்பால் நமக்கு ஆரா அன்பு பெருகுகின்றது; இவ்வாறிருக்க இவரனைய மக்களினத்திற்குப் பிழை செய்து விட்டோமே! அந்தோ! என் செய்வோம் என்று இவ்வாறு இரங்கிய வுள்ளத்தோடும் அவ்விலங்கினம் செலுத்திய அன்பு இராம லக்குமணர் செல்லும் இடந்தோறும் பின் தொடர்ந்து போகின்றது. அதை அறிந்த வேதக் கடலாய் விளங்கும் அனுமான், அக்கிட்கிந்தையில் அவ்விருவரையும் ஆராயும் வினையில் அதுகாறும் பெறுதிருந்த ஒரு நன் முடிவை அவ்விலங்கினத்தன்பாற் பெற்றான். பெற்று 'விலங்கினமே இவர்பால் இத்தகைய அன்பு பூண்டு பிழைகணிக்கின்றன என்னில், யான் இவரைப் பற்பலவாக ஐயுற்று எண்ணி மனங்கன்றுகின்றது எற்றுக்கு' என்று தெளிகின்றான். இதனை,

"தன்கன்று கண்ட தன்ன தன்மைய தறுகட் பேழ்வாய்
மின்கன்றும் எயிற்றுக் கோண்மா வேங்கையென் றினைய வேயும்
பின்சென்று காதல் கூரப் பேழ்கணித் திரங்கு கின்ற
என்கன்று கின்ற தெண்ணிப் பற்பல விவரை யம்மா"

என்னும் (கிட்கிந்தாகாண்டத்து அநுமப் படலத்தின் 12-வது) பாட்டாலறியலாம்.

இப்பாட்டினுரையில் பேழ்கணித்து என்பதன் ழகரத் தின் இடத்தை யகரம் பற்றிப் பேயான நிலையை அறியாது, பேய்க்கேற்பச் சொல்வகை செய்ய இயலாமல் பெரிதும் இடர்ப்பட்டுக் கொண்டு கூட்டிப் பொருளுரைத்தமைக்குக் காரணம் பழைய வழக்கமான பேழ்கணித்தலின் வீழ்ச்சியே யன்றி வேறில்லை.

பிழைகணித்தல் பேய்கணித்தலாக மாறியதைக் கம்பர் அறிவரேல், எப்படிப் பேய் பிடித்தது என்று கலங்குவார். பேயும், தன்னைப் பொருந்தா இடத்திற் புகுத்திவருத்து கின்றனரே என்று புலம்பும். 'பேகணித்து' என்றும் பாடபேதம் உண்டென்று உரைக்கீழ்க்காட்டியும் 'பேய் கணித்து' என்றதொரு பொருந்தாப் பாடத்தை மேற்கொண் டுரையிட்டது விந்தையாயுள்ளது. அஃது அச்சுப் பேயோ! அறியாமைப் பேயோ! எப்பேயாயினும் அப்பேய் கம்பருக்கு முன்னர் வன்பொடு நில்லாது மாயும். "எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான் படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" என்னும் பழமொழிப்படி கம்பராமாயணத்தைக் கைப்பிரதி செய்தவரோ அச்சூர்தியேற்றியவரோ இப்பாட்டிற் பேயைப் புகுத்திவிட்டார்போலும். யாம் பெற்ற ஏட்டிலும் 'பேழ் கணித்து' என்ற பாடமே உளது. இப்பாட்டின் பொருள் அமைதியையும் சொற்போக்கையும் நோக்கின் இதிற் பேய்வந்து குடியேறிய புதுமை புலவரைத் திடுக்குறச் செய்யும். 'பேழ்கணித்து' என்றதே நூலாசிரியர் கருத்துக் கேற்றது என்பது இனிது விளங்கும். பி. நா. சிதம்பரம் பிள்ளை பதிப்பிலும் பேழ்கணித்து என்றேயுளது.

இதுகாறுங் கூறியவற்றால், பிழைகணித்தல் என்னும் பழந்தொடர்ப் பொருளை இனிதுணர்த்த வேண்டி இக் கட்டுரை எழுதப் பட்டதாதலும், பிழைகணித்தல் என்பது பேழ்கணித்தல் என்று மருவியதும், நம் பண்டைச் சான்றோர் பலர் பிழைகணிக்கும் நற்பழக்கம் உடையராயிருந்ததும், திருமுறைகளிலும் திருவாய்மொழி யுரைகளிலும் கம்ப இராமாயணத்திலும் பேழ்கணித்தலைக் குறித்த பகுதிகளைப் பிழைகணித்தலாகிய நற்பண்பைக்கருத்திற்கொண்டு நோக்கிப் பொருள் செய்ய வேண்டுதலும் தெளிவுறும்.

422

பாரத தர்மம்

[திரு. மு. ஞானப்பிரகாசம், யாழ்ப்பாணம்]

தர்மம் என்பது மிகப்பழைய பாரதத்தின் மிகப்பழைய சொல். பண்பாடு, முன்னேற்றம், நாகரீகம் என்பன புதுக் கருத்துக்களை உணர்த்தும் புதிய சொற்கள். இந்தச் சொற்களுக்கு நாங்கள் எவ்வளவு மெருகு கொடுத்தாலும், இவைகள் தர்மம் என்ற சொல்லையோ அந்தச் சொல்லின் பொருளையோ உணர்த்தப்போவதில்லை. பழைய தர்மம் அவ்வளவு பெரியது. அதில் எழுந்த பெருங்கோட்டையே பழைய பாரதம். அந்தப் பழைய பாரதத்தை வணங்கிக் கொண்டிருப்பவர்கள் சனாதனிகள் எனவும் வர்ணாசிரமிகள் எனவும் பெயர் பெறுவர். சனாதனிகள் என்றால் வைதிகக் குடுக்கைகள் என்ற கருத்து அல்ல. உள்ளதை உள்ளபடி உணர்ந்து இயற்கை நெறி தவறாது கடமையாற்றி வருபவனே சனாதனி எனப்பெயர் பெறுவன். இன்றைய பாரதத்தில் அவ்வாறான சனாதனியைக் காண்பது துர்லபம். இன்றைய பாரதத்தில் பிறந்து வாழும் எவரும் தன்னை வாழையடி வாழையாய் வளர்த்து வந்த தர்மத்தைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. எல்லோரும் எல்லாவற்றிற்கும் மேனாட்டையே எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். அது சரித்திரத்தால், அரசியலால், கல்வியால், காலத்தால் வந்த மோசம். பாரத தர்மம் வெறும் ஏட்டு விஷயமல்ல. தற்கால உலகை ஆட்டிவைக்கும் அரசியல் பித்தலாட்டங்களைப் போக்க வல்ல ஒரே ஒரு சமய சஞ்சீவி அது. அது யாது? என்பதைத்தான் நாங்கள் உணர்தல் வேண்டும். உணர்ந்தால் மாத்திரம் போதாது. உணர்ந்த அதனை அகண்ட உலகிற்கு எடுத்து வழங்கும் பொறுப்பும் நமதேயாகும்.

அரசியல் சுதந்தரம் பெற்ற நாங்கள் அறிவியல் சுதந்தரமும் பெறவேண்டுமல்லவா? அதனையும் பெற்றுவிட்டோம் எனக்கூறுவது மடமை. நாங்கள் அறிவியலில் இன்னும் முழு அடிமைகளாகவே இருக்கிறோம். எம் நாட்டில் தானாக தன் பாரத தர்ம அடிப்படையில் நின்று சிந்திக்கும் சிந்தனையாளர் ஒருவருமில்லை. தம் முன்னோரளித்த அறிவியற் செல்வத்தில்

ஆவலுள்ளவரில்லை. ஆர்வமுள்ளவரும் இல்லை. தனக்கென-தன்னாட்டிற்கென இயற்கையாய் அமைந்த அறிவியற்செல்வத்தில் மலரும் வாழ்வே வாழ்வு என்ற உண்மையை உணர்ந்தவருமில்லை. ஆங்கிலம் படித்த நம்நாட்டு மேதாவி இன்றைக்கும் மேனாட்டு அறிவியல் நூலையே தனக்கு வாய்த்த வேதமெனத் தன்தலைமேல் தூக்கி வைத்திருக்கின்றார். மேனாட்டு அறிவியல் நூலில் எனக்கு ஒரு துவேஷமுமில்லை. ஆனால் நாங்கள் எங்கள் நிதானத்தை இழந்து விட்டோம் என்பதையே கூறுகின்றேன். என் அருமை வாய்ந்த நண்பர்களே! எங்கள் சமூக வாழ்விலே, சமூக அமைப்பிலே முதலிடம் பெறவேண்டியது எது? பாரத தர்மத்தின் அடிப்படைக் கொள்கையா? அல்லது மேனாட்டாரின் அடிப்படைக் கொள்கையா? வளர்ச்சித் தத்வத்தை உணர்ந்த நீங்கள் ஒவ்வொருவரும் எங்கள் சமூக அமைப்பிற்கும் எங்கள் வளர்ச்சிக்கும் எங்களை வாழையடி வாழையாய் வளர்த்த பாரத தர்மத்தின் அடிப்படைக் கொள்கையே, அடிப்படைக் கொள்கையாய் என்றும் நின்று நிலவவேண்டும் எனக் கூறுவீர்கள். நானும் அவ்வாறே கூறுகின்றேன்.

எங்கள் பாரததர்மம் இப்பொழுது ஒரு பிரளய துக்குள்ளே அகப்பட்டுத் தத்தளிக்கிறது. பாரத நாட்டின் நன்மைக்காகவும் உலக நன்மைக்காகவும் அது உயிர்பெற்று எழப்போகின்றதா? அல்லது முழுவதும் அந்தர்தானமாகப் போகின்றதா? இதுவே இப்பொழுது எழுங்கேள்வி. எங்கள் அரசியற்றலைவர்களும் அவர்களை வழிநடத்தும் சிந்தனையாளருமே இந்தக்கேள்விக்கு மறுமொழி சொல்லுதல்வேண்டும். வழிநடத்தும் சிந்தனையாளர் என்று சொன்னேன். சிந்தனையாளர் (thinker) மேனாட்டில் இருக்கிறார்கள். நமது பாரதத்திலே, எந்த மாகாணத்திலே, எந்த நகரிலே, எந்தக்கிராமத்திலே இந்தச் சிந்தனையாளர் தமது சொந்த அடிப்படையில் நிற்கும் சிந்தனைச் செல்வர்களாய்த் திகழுகிறார்கள். பாரதத்திலே இப்பொழுதுள்ள பெரிய வறுமை சிந்தனையாளரில்லாத கொடிய வறுமையே. மேனாட்டுச் சிந்தனையாளரும் ஞானிகளும் எம் நாட்டு அரசியல் முடிச்சுக்களையும், தத்துவ முடிச்சுக்களையும் அவிழ்த்து விடுவார்கள் என்று எதிப்பார்ப்பது பேதமை. அவர்கள் சிந்தனை அவர்களுக்கு நல்லது. அவர்களுக்கு அது விஷமல்ல. எங்களுக்கு அது விஷம். பாம்புக்கு அதன் விஷம் நல்லது. மற்றவர்களை அந்த விஷம் கொன்று விடுகின்றதல்லவா?

நான் முன்னேற்றம் என்ற சொல்லையும் அதன்பொருளை பொருட்படுத்துபவனல்ல. களிமண் இயற்கையாய்க் கிடப்பவனுமல்ல. ஆனால் வளர்ச்சி, தனிப்பட்ட மனிதன் வளர்ச்சி, சமூகவளர்ச்சி. தேசவளர்ச்சி ஆகிய இவற்றிற்காக அல்லும் பகலும் துடித்துக்கொண்டிருப்பவன். ஒவ்வொரு மனிதனும் இல்லை - ஒவ்வொரு பிராணியும் வளரவேண்டும், தன் பூரண உச்சநிலையை அவாவவேண்டும் என்பதே என் லட்சியம். நம்மவர் "மேனாடு, மேனாடு" என்று அந்த மேனாட்டிற்கு ஒரு சொரூபம் அமைத்து வணங்கி வருகிறார்கள்; அந்தச் சொரூபம் மேனாட்டாரின் முன்னேற்றம், அரசியல். விஞ்ஞானம் சரித்திரம் ஆகிய நான்கும் ஒரு கலவையாய்ச் சேர்ந்து எழுந்த ஓர் சொரூபம், அப்படி ஒரு சொரூபத்தை நிர்மாணித்து நம்மவர் தாராளமாக வணங்கலாம். அதற்கு ஒரு வழக்கில்லை. ஆனால் பாரததர்ம அடிப்படையை மறந்து உண்மை வளர்ச்சியை மறந்து அந்த உயிரில்லாத சொரூபத்தை வணங்கும்பொழுது தான் வழக்கு ஏற்படுகிறது. உள்ளம் கொதிக்கிறது.

பாரததர்மத்தின் அடிப்படை உண்மை யாது? அந்த உண்மை வெகு ஆழத்தில் மறைந்துகிடக்கிறது. அது வேதாகமங்களுக்கும் அதீதமானது. அது வேதாகமங்களினாலேயே பெறப்படுவது. அந்த உண்மை யாதெனில், அதுதான் 'உலகமெல்லாவற்றையும் தனக்குள் ஒடுக்கி வைத்திருக்கின்ற ஒரு மகாசங்காரகாரணம்: அது சிவம், சுபம், சாந்தம் எனப்படும். நாங்கள் அனைவரும் அதனுள் ஒடுங்கி மீளத் தோன்றுபவர்கள், அவ்வாறு அதனுள்ளே ஒடுங்கியிருந்து, அதிலிருந்தே மீளத் தோன்றுபவராயினும் அதனை மறந்து திரியும் சுபாவத்தினர். அதனை மறந்து திரிகின்றவகையில் நாங்கள் மூன்று பெரும் பிரிவினராய்த் திகழ்கின்றோம். அகம்பாவம் மிகவும் பிடித்த தமோகுண இயற்கையினர் ஒரு சாரார். சுமாரான அகம்பாவத்துடன் முயற்சி மயமான, 'ரயஸ்' குண இயற்கையினர் வேறொரு சாரார். அகம்பாவம் மிகவும் குறைந்த சாந்த சத்வ சீலர்களாவோர் இன்னொரு சாரார். எங்களுக்குள் முதற் பிரிவினரே பெரும்பான்மையோர். பெரும்பான்மையோர் ஆட்சி மேனாட்டார் வழக்கில் ஜனநாயக ஆட்சி எனப் பெரும் பெயர் பெறுகின்றதல்லவா? நமது பாரததர்ம வழக்கில் அது தமோகுண ஆட்சி எனப் பெயர்பெறும். முயற்சி, கட்டமை

புணர்ச்சிமயமாய் வாழும் இரண்டாம் பெரும் பிரிவினரின் ஆட்சி மேனாட்டார் வழக்கில் எப்படிக் கூறப்படுகின்றதோ அறியேன். நமது பாரததர்ம வழக்கில் அது 'ரயஸ்' குண ஆட்சி எனப் பெயர்பெறும். மூன்றும் பிரிவினராகிய சாந்த குண இயற்கையினர் இந்த உலகில் மிகமிகச் சிலரே. அவர்களின் ஆதிக்கம் நிகழும்பொழுது பாரததர்ம வழக்கில் அது சத்வகுண ஆட்சி எனப்படும். மேனாட்டில் இந்த சத்வகுண ஆட்சி எக்காலத்திலாயினும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. இராணுவக் கட்டுப்பாட்டில் வார்த்து எடுக்கப்பெற்ற ஒரு வகைக் குருமாரின் ஆட்சி ஒருகாலத்தில் நடைபெற்றது. அதை மேனாட்டார் மத ஆட்சி எனவும், theocracy எனவும் கூறுவர். இவையெல்லாம் எங்களுக்குத் தேவையில்லை. எங்களுக்குத் தேவை பாரததர்மத்தின் அடிப்படைக் கொள்கையாகிய ஒன்றே. மக்களின் அகம்பாவத்தின் வன்மைமென்மைக்கேற்ப இந்த உலகம் முப்பெருங்குண இயற்கைகளை யுடையது. ஒவ்வொரு குணமும் ஒவ்வொரு தொழிலைச் செய்யத் துடித்து நிற்கும். அந்த இயற்கைத் துடிப்பினை, அந்த வகையில் வளர்த்துப் பூர்த்தி செய்வதற்குரிய முறையில் சமூகமும் சூழலும் அமைந்திருத்தல் வேண்டும் என்பதையே பாரததர்மம் வற்புறுத்துகிறது.

[வரும்]

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பாம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

தருமபுரம், மாயூரம் P. O.

திருச்சியில்
தருமை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்

வித்வான், திரு. மு. இரத்தின தேசிகர்,
(தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி, திருவாரூர்.)

28—6—53 ஞாயிறு: காலை மணி 9. மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் திருக்கோயிலின் முன்புறம்—மௌன மடத்தின் முகப்பு. அட்டமங்கலங்களை ஏந்தி அணிவகுத்து நிற்கின்றனர் சிப்பந்திகள். காலையில் ஆறுமணிக்கு எழுந்த நான் நாட்காலைக்கடன்களை முடித்துக்கொண்டு எங்கெங்கோ சுற்றிவிட்டு மடத்தின் முகப்பில்வந்து நின்றேன். நின்றார் அனைவரும் தம்மை மறந்து வழிகுழியப்பார்த்து நின்றனர். மிகவேகமாகக் கார்வந்ததுதான் தாமதம். மங்கலதூரியங்கள் முழங்கின. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் வண்டியினின்றும் வெளிப்போந்தார்கள். மௌனமடம் கட்டளை விசாரணை வித்வான், ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தொழுதெழுந்து மாலைசூட்டிநின்றார்கள். அருட்பிரசாதம் வழங்கப்பெற்றார்கள்.

காலை 4-மணிக்கே தருமையினின்றும் சம்பிரதி, பொருள் காப்பாளர், இசைப்புலமைவாய்ந்த ஓதுவாமூர்த்திகள் முதலிய பரிவாரங்கள் புடைசூழ எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருச்சிக்குத் தென்மேற்கே 2½மைல் தொலைவிலுள்ள திருக்கற்குடி என்கின்ற உய்யக்கொண்டான் மலைக்கு எழுந்தருளி மைத்தடங்கண்ணிபங்கனாகிய உய்யக்கொண்டபெருமானை வழிபட்டு உளங்குளிர உடல்சிலிர்ப்ப இவ்வாறுவந்தெய்தினார்கள் என்பதை உணர்ந்த நான் "வாழையடி வாழையென வந்த அடியார் கூட்டத்துள் நான் ஒருவனன்றோ?" என்று எண்ணிய படியே அடியவர்கூட்டத்துடன் திருமடத்தினுள் சென்றேன்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருநீறணிந்து, ஜபமாலை ஏந்தி, மௌனகுருவாக வீற்றிருந்து காட்சிநல்கினார்கள். இக் காட்சியைக்கண்ட என் உள்ளம் 'தாயுமான சுவாமிகளுக்கு அன்று மோனமுத்திரைகாட்டி உண்மையை உணர்த்தியருளிய பெருமானே இன்று இப்படி எழுந்தருளினாரோ?' என்ற எண்ண அலைகளை எழுப்பிற்று. ஸ்ரீமத் கட்டளை சுவாமிகள்

குருநாதனுக்கு முறைப்படி ஆராதனை நிகழ்த்தினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அனைவருக்கும் திருநீறு வழங்க அடியேனும் பெற்றுய்ந்தேன்.

காலை உண்டி முடிந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆணையை அனைவரும் எதிர்நோக்கி நின்றார்கள். 'கற்குடி மன்னி நின்ற ஐயனை' வழிபட்டும் ஆராமை மீதுர ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் திருவுள்ளம் இன்னும் பல தலங்களுக்கும் எழுந்தருளிப் பெருமானைத் தரிசிக்க விழைந்ததுபோலும்! திருச்சிக்கு அணித்தாயுள்ள உறையூர், திருஎறும்பியூர், திருநெடுங்களம் என்ற மூன்று தலங்களையும் நண்பகலுக்குள் தரிசித்துத்திரும்பவேண்டுமென்று ஆணை பிறந்தது. வழிபாட்டிற்குரிய பொருள்கள் எல்லாம் சேமிக்கப்பெற்றன. ஆதிசைவப் பெரியார் ஒருவரும் உடன்செல்ல ஆயத்தமானார். மூன்று கார்கள் புறப்படச் சித்தமாயின. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளவே அனைவரும் பின்தொடர்ந்தனர். அடியேனும் பின்தொடர்ந்தேன்.

அனைவரும் மலைவாயிலை அடைந்தோம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வண்டியைநோக்கி, கோலோச்சிய கரத்துடன் விரைந்துசென்றார்கள். 'பச்சிளம் பசுங்கன்று ஒன்றுடன் விளையாடிக்கொண்டிருந்த ஆதீனத்தின் மதகளிறு' பிளிறிட்டுப் பெருமுழக்கம்செய்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருமுன்னர் வணங்கிநின்றது. இக்காட்சி என் உள்ளத்தை உருக்கிவிட்டது. அன்று அடவிசூழ்ந்த தருமையம்பதியில் ஆதி குருஞானசம்பந்தப்பெருமான் எழுந்தருளியபொழுது வேங்கையும், பசுவும், சிங்கமும், மானும், யானையும் ஒரு துறையில் நீர்பருகியதாக அன்பர் பலர் சொல்லக்கேட்டிருந்த நான் பசுங்கன்றுடன் விளையாடிய யானையைக்கண்டு, அந்நாளோ இந்நாள் என அயர்ந்துபோனேன்.

கார்கள் புறப்படுஞ்சமயம்; என் உள்ளத்தே எண்ண அலைகள் எழுந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பரிவாரங்கள் புடைசூழ தலயாத்திரைசெய்யும்பொழுதெல்லாம் ஆதீனப்புலவர் ஒருவரையும் அழைத்துவருவார்களே! இன்று ஏன் அழைத்துவரவில்லை! அக்குறையை நிரப்புவதற்கு அடியேன் ஏற்றவனா! என்றெல்லாம் எண்ணமிட்டபடியே

428

ஆதீனக் கருவூலத்தின் உரிமையாளரை அணுகி எளியேனுக்கும் இவ்வண்டிகள் ஒன்றில் இடம் கிடைக்குமோ? என வினவினேன். அவர்களும் மனமுவந்து 'வருக' என்றார்கள். வண்டிகள் புறப்பட்டன. நாங்கள் முதலில் சென்றடைந்த திருப்பதி உறையூர்.

உறையூர்: இது சங்ககாலத்திருந்தே சிறப்புவாய்க்கப்பெற்ற பெரும்பதி. உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார் போன்ற புலவர்பெருமக்கள் வாழ்ந்த இடம்; சோழ அரசர்கள் இருந்து அரசாண்ட தலைநகரங்களில் ஒன்று; கோழி ஒன்று யானையை வென்றதால் கோழி என்ற பெயரினையும் உடையது; புகழ்ச் சோழநாயனார் வாழ்ந்த ஊர்; பிரமனுக்கும், உதங்கமுனிவருக்கும் சிவபெருமான் ஐந்துகாலங்களிலும் ஐந்துநிறங்களில் இருந்து காட்சியளித்த தலம்: பஞ்சவர்ணேசர் காந்திமதியம்மையொடு வீற்றிருந்தருளி அடியவர்க்கு அருள்பாலிக்கும் இடம்; சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்ற தலம்; சோழர் தலைநகரம். ஆதலால் அங்கே மூவேந்தரும் அடிக்கடி கூடி இறைவனை வழிபட்டனர் என்பதைச் சுந்தரமூர்த்திசுவாமிகளும் தமது தேவாரத்தில் குறிக்கின்றார்கள்.

"நீருளாரும் மலர் மேலுறை வானெடு மாலுமாய்ச்
சீருளாரும் கழல் தேடமெய்த் தீத்திரள் ஆயினான்
சீரினல் அங்கொளிர் தென்னவன் செம்பியன் வில்லவன்
சேருமூக் கீச்சுரத்து அடிகள் செய்கின்றதோர் செம்மையே"

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெருமான் முன்னின்று வழிபட ஓதுவாமூர்த்திகள் இன்னிசையுடன் பதிகம் ஓதினார்கள். பின்னர் பல மூர்த்திகளையும் தரிசித்துக்கொண்டு புறப்பட்டோம். அடுத்தபடியாக திருஎறும்பியூரை அடைந்தோம்.

திருஎறும்பியூர்: திருச்சிராப்பள்ளிக்குக் கிழக்கே 6¼ மைல் தொலைவில் இத்தலம் அமைந்திருக்கிறது. ஆலயம் மலையின் மீது அமைந்துள்ளது. பழமையாகவே காட்சியளித்தது. கதிரவன் சிறிது தன் பொற்கிரணங்களை வீசத்தொடங்கி விட்டான். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கையாடை கொண்டே கதிரவனை மறைத்தவண்ணம் மலைப்படிகளில்

விரைந்து ஏறினார்கள். நாங்களும் பின்தொடர்ந்தோம். மலை உச்சியில் கோயில்கொண்டிருந்த எறும்பீசுவரர் சந்நிதியை அடைந்தோம். வழிபாடு நடைபெற்றது. ஓதுவாமூர்த்திகள் அப்பர்சுவாமிகள் அருளிய திருப்பதிகத்தை விண்ணப்பித்தார்கள். கருங்குழல்நாயகிக்கும் அருச்சனை செய்யப்பெற்றது. நானும் மற்றுமுள்ள சிப்பந்திகளில் சிலரும் திருநெடுங்களத்தில் வழிபாடியற்றுவதற்கு முன்னேற்பாடுகள் செய்ய முன்னர் விரைந்துசென்றோம்.

திருநெடுங்களம்: எறும்பியூருக்குக் கிழக்கே 7கல் தொலைவில் உள்ளது. செம்மையான பாதை இல்லை. வழியெல்லாம் எனக்குப் பாலைவனமாகக் காட்சியளித்தது. அயர்வின்றி வண்டியில் செல்லும் எனக்கே சோர்வு ஏற்பட்டபோது சமய குரவர்கள் நால்வரும் இத்தகைய தலங்களுக்கு அன்று வழி நடையாகவே சென்றருளிய அருமைப்பாட்டை எண்ணி உருகினேன். நெடுங்களம் அடைந்து ஆலயத்தைக் குறுகினேம். 'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாக' உள்ள பெருமானின் பழமையை, ஆலயம் எங்களுக்கு எடுத்துக்காட்டியது. அங்குநின்ற ஆலய சிப்பந்தி ஒருவரிடம் நாங்கள்வந்த காரணத்தைக் கூறினேம். அவரும் அருச்சகருக்கு ஆளனுப்பினார். கோயில் நிர்வாகிக்கும் அப்படியே. அதற்குள் வழியில் கிடந்த கற்களையும் குச்சிகளையும் நானும் பிறரும் அகற்றினேம். கோயிலில் தீபஒளி பெருமானது திருவுருவத்தைத் தரிசிக்கப் போதுமானதாயில்லை.

சற்றுநேரத்திற்கெல்லாம் இரட்டைமாட்டுவண்டி ஒன்றில் ஆலயநிர்வாக அதிகாரியும் மற்றொருவரும் வந்துசேர்ந்தார்கள். வண்டியும் நேராகவே ஆலயத்தினுள் நுழைந்துவிட்டது. வண்டியைவிட்டு இறங்கினார்கள். அதனாலும் அவர்களது நடையுடைபாவனைகளாலும் 'நிர்வாகிகள் இவர்கள்தாம்' என எண்ணினேம். அவர்களிடத்தில் எங்கள் வருகையைத் தெரிவித்தோம்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் வந்துவிட்டார்கள். நித்தியசுந்தரேசுவரர் திருமுன் சென்று நின்றார்கள். தீபஒளியைக்கண்ட ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் நிர்வாக அதிகாரியைநோக்கி இக்கோயிலின் ஆண்டு வருமானம் என்ன என

வினவினுர்கள். 5000 ரூபாய் என விடைவந்தது. சிறிது இருந்த நிலங்களும் இனம் ஆக்டில் போய்விட்டன என்றும் கூறினுர்கள். பிறகு மறுபுறம் திரும்பி எண்ணெய்கிடைக்குமா? பால் கிடைக்குமா? என மகாசந்நிதானம் அவர்கள் வினவினுர்கள். கிடைக்கும் என்ற விடைவந்தது. மற்றொருபுறம் திரும்பினுர்கள். பொருள்காப்பாளர் பொன்பொதியை அவிழ்த்து வேண்டியதை வழங்கினுர்கள். எண்ணெயும், பாலும் நொடிப்பொழுதில் வந்துசேர்ந்தன. உச்சிக்காலவேளை; ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அர்ச்சகரை அழைத்து இங்கே உச்சிக்காலம் உண்டா? என்ன நிவேதனம்? என்ருர்கள். காலம் உண்டு! நிவேதனம் சுத்தான்னம்தான்! என்ருர்கள். "கூறுசங்கம் தோல் முரசு கொட்டோசை அல்லாது சோறுகண்ட மூளியார்" என்ற நிலை நல்லவேளையாக அங்கே இல்லாதுபோயிற்று.

பெருமான் நித்தியசுந்தரராதலின் சுயம்புமூர்த்தியாகக் காட்சியளித்தார். அவரது திருமேனியையும் அவரது பழமையைக்காட்டிற்று. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களிடம், திருமேனி மிகச் சிறியதாக இருக்கிறதே! என விண்ணப்பித்தேன். 'ஆமாம்! இப்படிச் சிறியவராக இருந்தே பெருங்காரியங்களைச் செய்கிருர்' என்ற அருளுரை பிறந்தது. எண்ணெயைக் காணுத திருமேனிகுளிர தைலக்காப்பிடப்பெற்றது. அபிடேக ஆராதனைகள் நிறைவுற்றன. சம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகத்தை ஓதுவாமூர்த்திகள் இன்னிசையுடன் பாடினுர்கள்.

அப்போது என் உள்ளம் ஐயடிகள்காடவர்கோன் அருளிய க்ஷேத்திரத் திருவந்தாதியிடத்தே சென்றது.

"தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணுது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக் — கட்டி
எடுங்கள் அத்தா என்னுமுன் ஏழைமடநெஞ்சே!
நெடுங்களத்தான் பாதம் நினை"

என்று நினைத்துக்கொண்டேன். எல்லாத் தலங்களிலும் பெற்றுவந்த பிரசாதங்கள் அங்கிருந்த சிறுவர்களுக்கும், ஏழைகளுக்கும் வழங்கப்பெற்றன. விரைந்து திருச்சி நோக்கிப் புறப்பட்டோம்.

நண்பகல் ஒரு மணிக்குத் திருச்சி வந்தடைந்தோம். மாகேஸ்வரபூஜையை ஸ்ரீமத் கட்டளைத்தம்பிரான் சுவாமிகள் சிறப்புற நடத்தினார்கள். அன்று நானடைந்த பெரும்பேற்றை எண்ணி எண்ணி உள்ளமும் உடலும் பூரித்தேன். எங்கோ கிடந்த என்னை இப்படித் திருவருள்வலித்து க்ஷேத்திர தரிசனம் செய்யவைத்ததால் கண்ணுக்கு விருந்தைப்பெற்றேன். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருள் உரைகளை அவ்வப்போது கேட்டுச் செவிக்கு விருந்தைப் பெற்றேன். ஸ்ரீமத் கட்டளை சுவாமிகளும் அறுசுவைஉண்டியை வயிற்றுக்குவிருந்தாகத்தந்து விட்டார்கள் என்று எண்ணியவண்ணம் வயிற்றையும் நிரப்பிக் கொண்டேன். உண்ட களை தொண்டருக்கும் உண்டல்லவா? ஒரு தனியிடத்தே ஓய்வு எடுத்துக்கொண்டேன்.

மாலை 4-மணி. தேவஸ்தானத்தின் திருவாபரணங்களையும் கணக்குகளையும் ஸ்ரீலஸ்ரீ மாகாசந்நிதானம் அவர்கள் நேரே தணிக்கைசெய்தார்கள். ஆறு மணிக்கெல்லாம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களும் காரியஸ்தர்களும் திடீர் என்று புறப் பட்டார்கள். பக்கத்தில் இருந்தவர்களை 'என்ன இது? ஏன் இப்படி அவசரமாகப் புறப்படுகின்றார்கள்?' என்று வியப்புற்று வினவினேன். எல்லோரும் நந்தவனத்தைப் பார்வையிடப் போகிறார்கள் என்று பதில்வந்தது,

தருமை ஆதீனத்தின் நிர்வாகச் சிறப்பை எண்ணி எண்ணி உள்ளம் பூரித்ததைத்தவிர நான் என்ன செய்திருக்கமுடியும். இப்படி ஒவ்வொன்றாய் அலசிப்பார்ப்பதற்கு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுக்கு நேரம் ஏது? உடல் நிலைதான் இடங் கொடுக்குமா? என்று ஐயுற்றேன். "நஞ்செயல் அற்று இந்த நாம் அற்றபின் நாதன்தன் செயல்தானே" என்று எண்ணி எந்நேரமும் இறைபணியிலேயே திளைத்திருக்கும் இவர்களுக்கு இது ஓர் அருமையா என்றமுடிவிற்குவந்தேன். இரவு மலைமேல் மருந்தாய் இருக்கும் ஸ்ரீ தாயுமானவரையும், மட்டுவார்குழல் அம்மையையும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழிபட் டார்கள். அவரவர்களுக்கு வழங்கவேண்டியவற்றை வழங்கி னார்கள். தருமையம்பதியில் வீற்றிருந்தருளும் சொக்கநாதப் பெருமானைத் தரிசிக்கும் நினைவு உந்த, இரவு ஒன்பது மணிக்கு, திருத்தருமைநோக்கி எழுந்தருளினார்கள்.

H32

தருமபுர ஆதீனப் பிரசாரம்

திருப்புறம்பயம் ஸ்ரீ கரும்படு சொல்லம்மை சமேத ஸ்ரீ சாட்சிநாதப்பெருமான் சிவாலயத்தில் 25—6—53 அஷ்டபந்தன மகா கும்பாபிடேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அன்றும் முதல்நாளும் தருமபுரஆதீனப் பிரசார கோஷ்டியார் சொற்பொழிவாற்றினார்கள்.

முதனாள் 24—6—53 மாலை மணி 5-க்குத் தொடங்கிற்று. திருப்பனந்தாள் தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமை தாங்கினார்கள். திருப்புறம்பயம் தேவஸ்தானம் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் ஆதீனப் பிரசாரப்பணியினைப் போற்றிக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர் திரு. R. வேலாயுத ஓதுவா மூர்த்திகள் ஆகியோர்முறையே 'திருவாசகம்'' 'தோழர்காட்டிய தொழில்' என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

மறுநாள் 25—6—53 கும்பாபிஷேகத்தன்று மதுரை ஆதீனம் சின்னப்பட்டத்து ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக திரு ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள். திருவாரூர் இராஜன்கட்டளை கட்டளை விசாரணை & ஆதீனப் பிரசாரகோஷ்டித் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், உருத்திரமூர்த்தி தேசிகர், திருப்புறம்பயம் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள். திரு. சதாசிவப் பண்டாரத்தார். திருப்பனந்தாள் ஸ்ரீ மாணிக்கவாசக தம்பிரான்சுவாமிகள், காஞ்சிபுரம் பொன். குமராசாமிஅடிகள், ஆதீனத் தேவார பாடசாலை ஆசிரியர் R. வேலாயுத ஓதுவா மூர்த்திகள், குடந்தை சிவநேசத் திருக்கூட்டத்தினர் திரு. சொக்கலிங்கம் செட்டியார், திருவாவடுதுறை ஆதீன வித்வான் திரு. வீரசிவ சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் 'குடமுழுக்கு' 'சமயத்தொண்டு' 'சமயநிலை' 'திருப்பாசுரம்' 'புறம்பயம் கல்வெட்டுகள்' 'மக்களின் கடமை' 'பெரியாரைத்துணைக்கொள்.

பிறவியின் பயன்' ஆகிய பலபொருள்கள் பற்றிப் பேசினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முன்னுரையாகத் தற்காலம் மக்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகளையும், பாராயணம் சிவபூசை இவைகளின் அநுபவப்பயன்களையும் எடுத்துக்காட்டி உபதேச அருள்மொழி அருளினார்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.

மதுரை ஆதீனம் பெரியபட்டத்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருட்டிரு நீறு வழங்கி ஆசி அருளினார்கள். தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆணைப்படி ஆதீன வெளியீடாக அச்சிடப்பெற்ற திருப்புறம்பயத் திருப்பதிகம் என்ற நூலும் வழங்கப்பெற்றது.

வைத்தீஸ்வரன்கோயில் (வேளூர்) ஸ்ரீ வயித்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 10—6—53 புதன்கிழமை மண்டலாபிஷேகத் கிருத்திகையை முன்னிட்டுச் சமயப்பிரசாரம் நடைபெற்றது. மாலை 6-மணிக்கு வேளூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமை வகித்தார்கள். திருக்கருகாவூர் சமயத்தொண்டர் திரு. மருள்நீக்கியார் அவர்கள் 'அப்பர் அருட்டிறம்' என்பதுபற்றியும், ஆதீனக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்வான். திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'பிள்ளைத்தமிழ்' என்பதுபற்றியும், திருச்சி மௌனமடம் கட்டளை விசாரணை வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'திருமுருகாற்றுப்படை' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

மண்டலாபிஷேகக் கிருத்திகையை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் எழுந்தருளியிருந்தார்கள். இரவு புஷ்பப்பல்லக்கில் மேளவாத்தியங்களுடனும் வாணவேடிக்கைகளுடனும் ஸ்ரீ செல்வ முத்துக்குமர சுவாமி திருவீதி உலாக் காட்சி வழங்கியருளினார். ஏராளமான மக்கள் வந்து கண்டு தரிசித்து இன்புற்றார்கள்.

434

மதிப்புரைகள்

1. நாடகவிழாமலர்:

மாதுங்கா பம்பாய் தமிழ்ச்சங்கவெளியீடு. தொட்டாரை யன்றித் தூரஇருந்து காண்போரையும் தன்னகத்திழுத்து தமிழ் மணத்தை நுகரச்செய்கின்றது இந்த வாடாமலர். முதலில் அறிஞர்களின் வாழ்த்தொலி. அடுத்து டாக்டர் மு. வரதராசனுர் ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம் பார்ப்பதுபோல் ஒரு சிறு காட்சியைக்கொண்டு திருவள்ளுவ ரையே நாடக ஆசிரியராக ஆக்கிவிட்டார். கி. சுந்தரேசன் எழுதிய நாடக வளர்ச்சி, ஆ. முத்துசிவம் எழுதிய கலைப் போக்கு, கி. ஆ. பெ. விசுவநாதம் எழுதிய தமிழ்வளர்த்த பண்பு முதலாகிய கட்டுரை யிதழ்கள் இம்மலரில் உள்ளன. சோம. லெ. இலக்குமணச்செட்டியார், வி. மாதவம் பிள்ளை, ப. கோதண்டராமன், குமாரி வசந்தா, எஸ். எஸ், சங்கர் உள்ளிட்ட பல அறிஞர்களின் கட்டுரைகளும், குறள் ஓவியங் களும் அழகுசெய்கின்றன. சிறப்பாக ஸ்ரீ டி. கே. எஸ். சகோ தரர்கள் சங்கச்சார்பில் நடத்திய நாடகங்களின் ரசமான குறிப்புக்களும், அவர்களின் புகைப்படங்களும், பாலு சகோ தரர்களின் விளம்பரக்கலை என்ற கட்டுரையும் மலரின்முக்கிய அம்சங்களாகும். இவ்வாறுபல கட்டுரைகள், பலபடங்கள், வெள்ளிய காகிதம், பதிப்பித்த அச்சகத்தார் திறமை ஆகிய எல்லா வகையிலும் சிறந்து விளங்கும் இம்மலர் வேண்டு வோர் ஷை சங்கத்திற்கு எழுதிப்பெறுவார்களாக.

2. தோத்திரத்திரட்டு:

தெய்வநெறிக் கழக வெளியீட்டின் இரண்டாவதுமலர். இம்மலர் பதினெட்டு இதழ்களால் ஆகியது. துண்டுப்பிரசுர மாகிய ஒவ்வொரு இதழிலும் திருமுறைப்பாடல்கள் பல

அமைந்துள்ளன. இப்பிரசுரத்தின் மூலமாகத் தெய்வநெறி தழைத்தோங்கச்செய்துவரும் சிவநேசச்செல்வர் திரு. C. S. தாமோதரமுதலியார் அவர்களின் சமயப்பணி உலகம் பாராட்டக்கூடியதே. இதன் விலை அணா 4. வேண்டுவோர் '22. ஜெனரல் சுவாமிநாயக்கன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5' என்றவிலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

தஞ்சைமணி ஆண்டுமலர்:

கடந்த ஓர் ஆண்டாகத் தஞ்சைமணியிதழ் இடமிடங்கள் தோறும் சென்று அனைவர்க்கும் ஓர் எழுச்சியை உண்டாக்கி விட்டது என்று சொல்லிவிடலாம். அவ்வளவு விஷயங்கள் ஒவ்வொரு இதழிலும் வெளிவந்துள்ளன. அதுமட்டுமன்று கட்சிச்சார்பின்றி மதச்சார்பின்றி மணியின் நாக்குபோலவே நடுநின்று தமிழகமெங்கும் தம்கொள்கையைப் பரப்பிவந்தது. அத்தகைய இந்தபத்திரிக்கையின் ஆண்டுமலர் 5—7—53-ல் வெளிவந்திருக்கிறது. அறிஞர்களின் பல கட்டுரைகள் செவிக்கு விருந்தாக உள்ளன. மடாலயங்கள் மொழிக்கும் சமயத்துக்கும், பொதுநலனுக்குமாக என்னென்ன பணிகள் செய்துகொண்டிருக்கின்றன என்ற கேள்விக்கு இனி இடமில்லை என்று சொல்லிவிடலாம். ஒவ்வொரு மடாலயங்களும் செய்து வருகின்ற பணிகள் ஒவ்வொன்றும் இதில் விபரமாகத் தரப்பட்டிருக்கிறது. பேச்சாளர் யார்? எழுத்தாளர் உலகம், யார் அரசியல்வாதி? என்ற கட்டுரைகள் ஒவ்வொருவரும் படிக்கவேண்டியவை. அரசியலைப் பற்றிய கருத்து விளக்கப்படங்களும் மலருக்குத் தனியழகு கொடுக்கின்றன, இத்தகைய அழகிய நன்மலரைத் தோற்றுவித்த ஆசிரியர் திரு. S. கணபதி அவர்கட்கு உலகம் நன்றி பாராட்டுமாக.

கிடைக்குமிடம்:- ஆசிரியர், தஞ்சைமணி. அலுவலகம், காந்திபூங்கா மேல்புறம், கும்பகோணம்.

436

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-ஹூ ஆனி-மீ 1-உ முதல் 32-உ முடிய)

(16—7—53 முதல் 16—8—53 முடிய)

1. மேஷம், அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி 4 பாதமும் பரணி 1, 4. பாதமும் கார்த்திகை முதல் பாதமும் சுபபலத்தைத்தரும். தொழில் மேன்மை, வியாபார விருத்தி, உத்யோகலாபம், வியாதி சாந்தி, தூர யாத்திரை, நஷ்டதனம் வரத்து, வியவஹார வெற்றி முதலிய சுபங்கள் மாதம் பூராவும் நடைபெறும். பரணி 2, 3 பாதங்களில் உள்ள வியவசாயிகள், பிரபுக்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள் இவர்கள் பலவித இடஞ்சல்களில் அகப்பட்டுக்கொண்டு சிரமப் படுவார்கள். சத்துருக்களால் ஆபத்துக் காட்டும். பித்துப் பிடித்தவன்போல் காரியங்களில் பிரவிருத்தி ஏற்படும். எங்கும் விரோதம் ஓங்கும். மேலோர் பெரியோர் சாபம் கிட்டும், தர்மமே ஜயமென்று இருப்பவர்கள் காப்பாற்றப்படுவார்கள். புதனும், வியாழனும் சுபமாகும்.

2. விருஷபம், கார்த்திகை, ¾ ரோஹிணி, மிருகசீரிஷம். ½

ஷை விருஷப ராசிக்காரர்களுக்குச் சென்றமாதம் போலவே நடக்கும் அடிக்கடி வீண் அலைச்சலும், தொழில் நஷ்டமும், வியாதிபயமும், வியவஸாயத்தொல்லைகளும், காரிய விக்னமும். மானபங்கமும், அதிக விரோதமும் காட்டும், சனி, புதன் சுபமாகும்.

3. மிதுனம், மிருகசீரிஷம், ½ திருவாதிரை, புனர்பூசம். ¾

புனர்பூசந்தவிர மற்ற நக்ஷத்திர பலன்கள் சுபமாகும். சுபத்தை அனுபவிப்பவர்கள் தெய்வபலத்தோடு ஸந்தோஷமடைவார்கள். உத்தியோகத்தில் பிரமோஷன் எடுத்தகாரியம்வெற்றி சதாசுபமானசெலவுகள், வெகுநாளாய் எதிர்பார்த்த மனிதன் மூலம் தனம்கிடைத்தல், கட்டிடம்கட்டல், வியாபாரவிருத்தி

முதலியவைகள் நடக்கும். புனர்பூசத்துக்கு துற்புத்தியும் ஸதா குரோதமும், சத்துரு விருத்தியும், எடுத்தகாரியங்கள் எல்லாம் விக்னமடைதலும், நாஸ்திகர்கள் சேர்க்கையால் ஆபத்து அடைதலும், திட்டுக்காத்தலும், வியவஸாயத்தில் கஷ்ட நஷ்டங்களும் ஏற்படும். சனியும் புதனும் சுபமாகும்.

4. கடகம், புனர்பூசம், ¼ பூசம், ஆயில்யம்.

ஆயில்யத்துக்குத் தெய்வபலத்தால் பிரமாதமான சந்தோஷமுண்டாகும், தங்களைச்சேர்ந்தவர்களுக்கும், ஆப்தர்களுக்கும், பெறுமளவில் உதவிகாட்டும், எல்லாம் நன்மையாகவேநடக்கும். பெரியோர் பக்தர்கள் அன்பு விசேஷமாகும், சத்துருநாசமும், கடன் நிவர்த்தியும், மங்களகாரியமும், கிரயவிக்ரயகௌசலமும் ஏற்படும், மற்ற இரு நக்ஷத்திரபலனும் ஆபத்தைத்தெரிவிக்கும், தாரபுத்திரபீடை, நாஸ்திகம், திருட்டுப்பயம், சத்துருக்களால் வஞ்சிக்கப்படல், அபஜயம், ஸர்வகார்ய விக்னம் இவைகள் ஏற்படும். சனி, செவ்வாய் நலன்காட்டும்.

5. ஸிம்மம், மகம், பூரம், உத்திரம். ¼

சிம்மராசிக்காரர்கள் பூராவுமே சுபத்தை அடைவார்கள். சென்றமாதம் போலவே நடக்கும். புதிது புதிதாகக்காரியங்கள் ஆரம்பித்தல், கட்டிடம் கட்டுதல், ராஜதுல்யர்களிடம் நன்மையடைதல், ஜெயமுண்டாகுதல், விவசாய விருத்தி செய்தல், தொழில் ஓங்குதல், கீர்த்திபத்திரம் கிடைத்தல், தூரதேசத்திலிருந்து கூப்பிடுதல், அடிக்கடி சஞ்சாரபலன் முதலியவைகள் ஏற்படும். வெள்ளிக்கிழமை சுபத்தைத் தரும்.

6. கன்னி, உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை. ½

உத்திரம் 1, 2, பாதங்களும் ஹஸ்தம் முதல் பாதமும் சுபமாய் நடக்காது. சதா கலகங்கள் ஒன்றின்பின் ஒன்ருய் காட்டும். இல்லறகஷ்டம் ஜாஸ்த்தியாகும், வைத்தியச் செலவுகளும், வீண்மனஸ்தாபங்களும், பெரியோர்களின் கோபமும், தார புத்திர பீடையும், காரியவிக்னமும், கஷ்டநஷ்டங்களும், ஏற்படும். மற்ற பாதங்களும் நக்ஷத்திரபலனும் சுபமாகும், நூதன தொழில் கிடைத்தல், வியாபார விருத்திசெய்தல்,

மேலோர் அன்புகிடைத்தல், உத்தியோகம் பிரமோஷன் ஆகுதல், தெய்வபலம் கிடைத்தல், வியவஹாரவிஜயமாகுதல், சத்துரு நாசம் ஏற்படல், மனதுக்குச் சந்தோஷகரமான காரியங்கள் ஏற்படல் முதலிய சுபபலன்கள் நடைபெறும். சனி, புதன். சுபமாகும்.

7. **துலாம்**, சித்திரை, $\frac{1}{2}$ சுவாதி, விசாகம். $\frac{3}{4}$

சித்திரையும் சுவாதியும் சென்றமாதம்போலவேநடக்கும். சுபகாரியங்களும், விசேஷ லாபங்களும், பெரியோர் மேலோர் வரத்தும், பெரியசன்மானங்களும், கீர்த்திபத்திரங்கிடைத்தலும் கடன் நிவர்த்தியாகுதலும், சத்துருநாசமடைதலும், இல்லறசுக போகங்களும், தனதான்ய லாபமும், வாஹன விருத்தியும் ஏற்படும். விசாகத்துக்கு சென்றமாதம்போலவே அசுபபலன்கள் நடக்கும். ராஜாங்க நிர்ப்பந்தம், கிரிமினல்கேஸில் மாட்டிக் கொள்ளுதல், அபஜயமடைதல் முதலியவைகள் தான் நடக்கும். சனி செவ்வாய் சுபம்தரும்.

8. **விருச்சிகம்**, விசாகம், $\frac{1}{4}$ அனுஷம், கேட்டை.

கேட்டை நக்ஷத்திரபலன் சுபத்தைத் தரும். மற்ற இரண்டும் அசுபத்தைத் தரும். மாதம் பாதிக்குமேல் எல்லா நக்ஷத்திரக்காரர்களும், சுகதுக்கத்தைச் சமமாய் அனுபவிப்பார் கள். மிராசுதார்கள் சிரமப்படுவார்கள், தொழிலாளிகள் லாபம் அடைவார்கள். சமபலனேயாகும். புதன் வியாழன் நலன்தரும்.

9. **தனுசு**, மூலம், பூராடம், உத்திராடம். $\frac{1}{4}$

தனுராசிபலன் சென்றமாதம்போலவே நடக்கும். கொஞ் சம் நன்மைகளும் கிட்டும். சதா அலைச்சலின்பேரில் லாபம் கிடைக்கும். இல்லறசுகம் ஏற்படும். தனலாபம் எதிர்பாராதபடி கிடைக்கும், உத்தியோகலாபம், வியவசாயவிருத்தி, கூபதடாக நிர்மாணம், கட்டிடம்கட்டுதல், காலிகன்றுசேருதல், வாஹன விருத்தி முதலிய சயங்கள் நடைபெறும். வெள்ளியும் சனியும் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

திருவோணத்துக்குத் தொழில்பழக்கம், உத்தியோகலாபம், ஆரோக்கியமுண்டாகுதல், நல்லஸர்டிபிகேட்டுகள் கிடைத்தல், மனம் சந்தோஷமடைதல்; முதலிய சுபமும் மற்ற இருநக்ஷத்திரக்காரர்களுக்கும் பலவித இடஞ்சல்களும் சத்துருவிருத்தியும், வாகனத்திலிருந்து நழுவுதலும், இல்லறகஷ்டங்களும், மான பங்கமும், சதா அலேச்சலும், வீண்மனஸ்தாபமும் உண்டாகும். சனி, செவ்வாய் நலன் தரும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

பூரட்டாதி முதல் இரண்டுபாதங்களுக்குப் பூர்ணசுபம் கிடைக்கும். இல்லற சுகபோகங்கள் கிடைக்கும், நூதன வஸ்திராபரணச்சேர்க்கை, மேலோர் பெரியோர் ஆசி, கீர்த்தி பத்திரம் கிடைத்தல், பந்துமித்ராளுடையசேர்க்கை, சுப ஸமாசாரக் கேள்விகள் முதலிய சுபங்கள் நடைபெறும். மற்ற இரண்டு நக்ஷத்திரபலனும் சமமாகும், நஷ்டம்காட்டும் வீண் அலேச்சலும், ஆரோக்கியக்குறைவும், காரியம் தடைப்படுதலும் ஏற்படும். வெள்ளிக்கிழமை சுபமாகும்.

12. மீனம். பூரட்டர்தி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதிக்குப் பூர்ணசுபம். உத்திரட்டாதிக்கு $\frac{3}{4}$ சுபம். ரேவதிக்கு $\frac{1}{2}$ சுபம் ஏற்படும். மொத்தத்தில் மூன்றுநக்ஷத்திர பலனும், ஒன்றுக்கொன்று அனுசரணேயாகவே நடக்கும். சில எதிர்பாராத லாபம்ஏற்பட்டுக் கடன் தொலேயும், தொழில் ஓங்கும். தெய்வபலம் கிட்டும். அஸாத்தியமெல்லாம் சுபமாகும், சதாதெய்வசிந்தனே செய்பவர்கள் மிகுந்தசந்தோஷம் அடைவார்கள். புதனும் வியாழனும் நலன் தரும்.

குறிப்பு:- ஷ மாதம் 15-க்குமேல் குரு சுக்கிரன்சேர்க்கை ஏற்படுவதால் வியவசாயம் செய்பவர்களும், மிராசுதார்களும், காலக்கோளாறுகளால் பாதிக்கப்படுவார்கள். கடவுள்துணே தான் ஜயிக்கும்.

சத்திய ஞானமே ஞான மகந்தம்
மெய்த்தகு ஞேய மிகவுற்ற வானந்த
முற்றிய ஞாதுரு மூன்றிலும் தோன்றுன்
சுத்தக் குரவன் சொரூபத்து ளானே.

எனவும் பிறவும் முன்னுதாகரித்தவாற்ருனுணர்க. இனி **உயர் சிவமும் பரமு** மென்றற்ருெடக்கத்திற்கு வருமாறு.

அன்றியே சொரூபந் தன்னு
லதிசிவ பரமான் மாவிற்
றுன்றிய தோற்ற வியாத்தி
நான்முகம் சொல்லுங் காலை
நன்றுறு நனுக்க னுவே
காடிய சுழுத்தி தன்பாற்
றுன்றிய சொச்சொ ரூபந்
துரியமாய்த் தோன்று மன்றே.

அன்னது புரிந்த போதி
லனுபவ மெங்ஙு னென்னிற்
றுன்னமு விரும்பு நீரே
நிகரெனச் சொல்லும் வேத
மன்னிய சொருவ மற்றச்
சிவம்பர மான்மா மாயை
துன்னிய முப்பாழ் நாற்பாழ்
தொலைவுறக் கரத்த லாலே.

என்னும் நிராமயதேவர் நூலாற் சொற்சொரூப தெரிசன அனுபூதி கூறுமாறு காண்க. எனவே நீலோற்பல வாக்கிய சித்தியந்தம் நாற்றுரியம் தூலப்பிரணவமென்னும் மகா வாக்கிய வவத்தை யெனவும், அதன்மேற் "பகர் சொரூபவத் துயர் சிவமும் பரமு" மென்னும் செய்யுளாற் சொச்சொரூ பானுபவ மென்னும் சூக்கும வோங்காரானுபவமும் கூறிய வாருயிற்று. இச் சூக்கும வோங்காரத்திற் சிவமும் பரமு மான்மாவு மெனத் தோற்ற வியாபக வொடுக்க மென்னுஞ் சாக்கிரஞ் சொற்பனஞ் சுழுத்தியினிகழு மூன்று சைதன்னிய பேதமுமொன்றே. தொாவத்தையிற் சீவ பரசிவமென

வோரறிவே மூன்றானவாறு போலென்க. இந்தச் சூக்கும வோங்காரத்தின் முப்பாழ் கரத்தலாவது தூலப் பிரணவத்தினிகழும் முத்திரியங்..............பாழ்க்கரத்தலாவது அந்த நீலோற்பல வாக்கிய சித்தியடியாகப் பிறந்த சூக்கும வோங்காரத்தின் நால்வகைத் துரியமுங் கரத்தல். அது முன்னர்,

இந்தமகா வாக்கியத்துரிய நனை தினிறுதியின்கட்
சொருபமுத்தி காரண மென்றாக
வந்த சொச்சொருப முத்திவகை மூன்றுந்தான்வரு
சூக்குமப் பிரணவமா மிம்மூன்றிற்கு
முந்து சூக்கம மதிசூக்கம மகாசூக்கமென்றுரைப்பது
மாங்காரணமெனச் சொருபங் கூடத்
தந்திடு நான்முத்தியுமே சூக்கும வோங்காரந்தா
னிதுவே தாரமெனும் பிரணவங்காண்.

எனக் கூறியதனுல் உணர்க. இவ்வாறு சூக்கும வோங்காரானுபவத்தைப் பொதுப்படச் சொல்லி மேலிதன் பேதமான சூக்கும மதிசூக்கும மகா சூக்கும மென்னும் மூன்றினனுபவமுஞ் சிறப்பித்துச் சொல்லுது மென்பது தோன்றச் செப்புது மேற் சூக்கும வோங்காரத்தினிலேயே என்றது. பிறவும் விரித்துக்கொள்க. 52

53. * * *

அப்படியாஞ் சொச் சொருபந்தான் என்பது அம்மூன்றனுடைய சூக்கும வோங்காரானுபவம் கூறுகின்றது. அது நிராமயதேவர் நூலில்,

ஒழிவி லா.........ச் சொருபமான
வுணர்வினுற் சுருவத்தோடு
கழிவுறு சிவன்ப ரான்மா வியாபகங்
கரையக் கண்டங்
கழிவுற விடல்க........னுவேயாதி
மூன்று மதற்றுத்........
தொழவுறு துரியஞ் சூக்கச் சொருவ
மாய்த் தோன்று மன்றே.

ஆங்கதிற் சுவானுபூதி யதுதனை யறியுங்காலை
யோங்கிய லவணம்நாழி யப்பொரு நாழியொன்றி
யாங்கொரு நாழியாமா றெனவவை யகத்தடங்க
நீங்கலச் சுவானுபூதி நேயமாய் நின்ற தன்றே.

என வருமாற்றான் உணர்க. அவ்வாறு திருமந்திரத்திலும்,

அப்பினை யுப்பென வத்த னணைந்திட்டுச்
செப்பு பராற்பரஞ் சேர்பர மும்விட்டுக்
கப்புறு சொற்பத மாளக் கலந்தமை
யெப்படி யப்படி யென்னுமவ் வாறே. 2945

என வரும். 53

54. * * *

மற்றதி சூக்கும சொரூப மென்பது சூக்கும வோங்கா ரத்தின் பேதமான அதி சூக்கும மகா சூக்கும வோங்காரானு பவ மாமாறு கூறுகின்றது. இவ்விரண்டனுள் அதிசூக்கும வோங்காரானுபவத்திற்கு வருமாறு திருமந்திரத்தில்,

கரியுண் விளவின் கனிபோ லுயிரு
முரிய பரமுமுன் னுதுஞ் சிவமு
மரிய துரியமே லகிலமு மெல்லாந்
திரிய விழுங்குஞ் சிவபெரு மானே. 2593

என வரும். இவ்வாறு நிராமயதேவர் நூலும்,

அதி சூக்கச் சொரூபந் தன்னுற்
சூக்குமச் சொரூப மென்றித்
துதியாற்று சொச் சொரூபந்
தொல்சிவம் பரம்ப ரான்மா
விதியாற் கண்டவற்றின்
வியாத்த...வுண் டிட்டு விட்ட
துதியாற்றத் துரியந் தோன்று
மதிசூக்கச் சொரூபந்தானே.

வேழ முண்ட விளாங்கனி நேரதா
மாளு மவ்வதி சூக்கச் சொரூபமுற்
றாழ டைந்திட வென்றே யுயர்மறை
சூழு மந்தந் துதிபெறச் சொல்லுமே.

என வரும். இனி மற்று மகா சூக்குமத்திற்றுரிய மென்ப தற்கு வருமாறு நிராமயதேவர் நூலின்,

அன்றி மகா சூக்கமான சொரூபமே யடைந்தகாலை
யொன்றிய மயிர்க்காறேறு மொழிவிலானந்தமாகு
மொன்றிய துரியநான்கா லூற்றிடு மவத்தை பத்தால்
நின்றிடு மான்மபேத நிகழ்வு கொண்டெனவே காண்டி.

என வரும். இங்ஙனம் கூறும் பிரணவபேதங்கட்கு மான்மா யொன்றேயென்று மீண்டுந் தோன்றக் கிடந்தது. இவ்வாறு திருமந்திரத்தும்,

ஓது மயிர்க்கா றேறுமமிழ் தூறியே
பேத மபேதம் பிறழாத வானந்தத்
தாதி சொருபங்கண் மூன்றகன் றப்பாலை
பேதம மெல்லாஞ் சுரபிதன் மேன்மையே. 2856

என வரும். 54

55. * * *

இத்திறத்தாற் சொரூபமோடென்பது சூக்கும வோங்கார பேதமான..........யனுபவ முணர்த்தியவாற்றுற் றாலப் பிரணவ சித்தி முடிவிற்குப் போல இந்தச் சூக்கும வோங்கார பேத முடிவினும் நீலோற்பல வாக்கிய சத்தியமாறு கூறு கின்றது. அது வருமாறு நிராமயதேவர் நூலின்,

ஒன்றிய துரிய நான்கா லூற்றிடு மவத்தை பத்தா
னின்றிடு மான்ம பேத நிகழ்வுகொண் டெனவே காண்டி

என்றதன்பின்,

மா விசுவன்மாதைசதன் மாப்பிராஞ்ஞன்
மருவுமூன்று ெ......மிரணியகெற்பனவ்வியா
கிருதனெ......மாவமாசொ......தை பிரசா
பதியென மருவுப......யான்மரூமாமெ
லதுரிய நான்கி னெனென்பானும்

ஆதலா ... ... சொரூப
சூக்கும மதிசூக்கும ... ...
... ... சூக்கு நான்காஞ் சொரூபமே
யுரைக்குங் காலைத்
தீதில் சூக்குமாகா ரத்தின் செய்கையாஞ்
சிவனல்லாற்
போதமாம் பரஞ்சிவம் பின் சொருவந்
தூலம்புகன்றால் ... ...

தத்துவம் விட்ட சிவன் பரஞ்சிவன் சொருவந்தானுன்
உய்த்திடு துரியநான்கா லுளது தூலத் தோங்கார ...
சுத்தமாஞ் சொச்சொரூபஞ் சூக்க மிகுமதிசூக்கமாசூக்கத்
தொத்திடு சொரூபநான்காம் துரியமச் சூக்கமாகும்.

அன்னதிற் சொச்சொரூப மாதியாந் துரியமூன்றுந்
துன்னுறு சத்தியாதி நான்கெனத் தான்மேலாகத்
துன்னுமா சூக்கமான சொரூபமே சூழக்கோடா
றன்னையுமுற்பலம் போற் சாற்ற நீ சமைந்து கேளே.

என வருமாற்றான் உணர்க. ஈண்டுச் சத்தியாதி நான்கென்றது சத்தியம் ஞானம் முதலிய நீலோற்பல வாக்கியத்தினிகழும் நான்குமே சிவ சத்தியாதியென்று பிறவும் விரித்துக்கொள்க.

56, * * *

நீல நீற மணம் என்பது தூல பிரணவ முடிவிற்குப் போலச் சூக்குமப் பிரணவ முடிவினும் கூறும் நீலோற்பல வாக்கிய சித்தியாமாறு கூறுகின்றது. இவ்வாறு ஞான சித்தியிலும்;

एवं तत्त्रिपदं शुद्धं लक्षणाथ तदुच्यते ।
शिवानन्दं महादेवि सत्यज्ञान मनन्तकम् ॥
आनन्दान्तस्मितज्ञप्तेस्तत्स्वरूपं प्रकाशितम् ।
सत्यं ज्ञानमनन्तं च आनन्दं चतुरुद्भवम् ॥
सत्यात्म तत्परज्ञान शिवानन्दं त्रिधा गुणाः ।
आनन्दाः शक्तयो योज्यं तत्प्राप्तं सद्गुरोः पदम् ॥
स्वरूपं तत्र रूपं च गुणत्रय विभूतयः ।
एतच्चतुष्प्रकारार्थं सत्यादि गुणसंपदम् ॥
रूपं गन्धं गुणं शोभा यथा उद्भवमुद्भवम् ।
तथैवेत्यादि तद्भेदं स्वरूपं तस्य उद्भवम् ॥
ज्ञान ज्ञेय ज्ञातृकान्तं त्रिपदार्थं समुच्यते ।
तस्मात्स्वरूपं तत्रापि प्रकाशानन्दविग्रहम् ॥
तत्प्राप्तिस्तत्परामुक्तिः शिवजीवैक्यसम्भवम् ।

என வரும். இது தூலப்பிரணவ முடிவினிகழு நீலோற்பல வாக்கிய சித்தி. இவ்வாறீண்டுக் கூறியது, நீலநிற மணஞ் சோபை பலவும் விசேடணமாய் நிகழ நீலோற்பல வுருவாம் விசேடியத்திற் சால வருபலவுமொன்றாய் முடியுமா பொற் சத்திய ஞானானந்தஞ் சிவபரன் சிவமா யேல வருஞ் சொருவ மாயுடலி லடங்கினவாறு என்பது மட்டுமென்க. இவ்வாறு சூக்கும வோங்காரத்தின் முடிவின் வரு நீலோற்பல வாக்கிய சித்தியைக் கூறியது. இவ்விடத்து முத்துரியத்தியல்பும் விசேடணமாய் "மேல தேனுந் துரியமுடல் விசயமென்றாக ......வுமிஃதானந்த மோனமே என்பது நிராமயதேவர் நூலிற் றன்னையுமுற்பலம் போற் சாற்ற நீ சமைந்து கேளே" என்றபின்,

நிறனோடு குணமுஞ் சோபை நீடு லக்ஷணம் நான்கும்
முற மணி தன்னிலொன்றாய் நின்றவா...த்
திறனுறு மேலதான சொருவநான் கதுவே சோபை
பெறவுறு மானந்தந்தான் பெரியதோர் மோனமாமே.

என வருமாற்றான் உணர்க. இவ்வாறு மணி திட்டாந்தத்தால் திருமந்திரத்திலும்,

மன்னு சத்தியாதி மணியொளி மாசோபை
யன்னதோ டொப்ப மிடலொன்று மாறது
வுன்னிய வுற்பல மொண்சீர் நிறமணம்
பன்னிய சோபை பகராறு மானதே. 2827

மணியொளி சோபை யிலக்கணம் வாய்த்த
மணியென லாய்நின்ற வாறது போலத்
தணிமுச் சொருபாதி சத்தியாதி சாரப்
பணிவித்த பேர்நந்தி பாதம்பற் றுயே. 2482

என வரும். இது மணி வாக்கிய மெனினுமாம். பிறவும் விரித்துக் கொள்க. 56

57. * * *

இது நிலையாய்ப் பிறக்கு மதி சூக்குமவோங்கார மென்பது பஞ்சப் பிரணவங்களுள் தூலப் பிரணவமும் சூக்குமப் பிரணவமும் கூறி, இனி மூன்றும் பிரணவமென நின்ற வதிசூக்கும வோங்காரமென்னு முத்கிராந்த முத்தியவத்தையினிகழும் அனுபவம் கூறுகின்றது. இந்த முத்கிராந்தமென்னும் மோன முத்தியினிகழும் நாற்றுரியமான சாம்பவிதுரியம் கேசரிதுரியம் ஞானதுரியமான விம்மூன்று முத்திரைக்கு மேனிகழும் ஞானதுரிய மென்னும் உத்கிராந்த துரியங்களாம். அது வருமாறு நிராமயதேவர் நூலின்,

ஆங்கெண்டுரியத்தாகிய கன்றிடவதன் மேலாக
வோங்கு சாம்பவியேயோது கேசரி ஞானமுத்திரை
பாங்கினுன் மூன்றென்றுகப் பகர்தரு துரியம்பார்வை
தீங்கின் மேலகத்தே காட்டத் தெளிவொடு துரியஞ்சேரும்

அதிசூக்குமப் பிரணவ மீதாவதி லனுபூதிகூறி
றுதியாற்றுப் படுபாறேனெய் சொல்லு சற்கரையேசேரப்
பதிபார்க்கிலமு தொப்பாகு மென்றலாற் பகரின்மோனக்
கதியாற்றிப் பொருளேதெக் கணேசனுங் காட்டினனே.

என வரும் இவ்வாறு திருமந்திரத்திலும்,

பாலொடு தேனும் பழத்து ளிரதமும்
வாலிய பேரமு தாகு மதுரமும்
போலுந் துரியம் பொடிபட வுட்புகச்
சீல மயிர்க்கா ளூறுந்தேக் கிடுமே. 2831

என வரும். 57

58. * * *

இந்நிலைதான் சனகர் முதல் என்பது மேற்கூறிய வதிசூக்கும வோங்காரத்திற்கு முத்கிராந்தமென வருதற்குக் காரணம் கூறுமுகத்தான் மகா சூக்குமப் பிரணவ முத்தி யென்னும் நடனமுத்தியனுபவம் கூறுகின்றது. இது நிராமய தேவர் நூலில் 'தெக்கணேசனுங் காட்டினனே' யென்றதன் பின்,

சனகனே சனந்தன் மற்றைச் சனற் குமாரன் வேறான
முனிசநா தனனுல் வாக்குமுன்னைமுப் பாதந் தோற்றித்
தனுவிலே முத்திகாட்டித் தக்க வேதாந்தந் தன்னில்
முனமுறு ஞானமோன முறைமையா லறிவித்தானே.

என வரும். இவ்வாறு திருமந்திரத்திலும்,

கால்காட்டு நந்தி கருணையான் மிக்க
மால்காட்டி யென்னச் சிவமாக்கி வைத்தபின்
மேல்காட்டி முத்திரைகாட்டி வேதாந்தத்தின்
பால்காட்டுந் தாளுந்தன் பாதமும் காட்டுமே.

என வரும், இவ்வாற்றான் முத்கிராந்தமுத்தி யென்றதற்குக் காரணம் கண்டுகொள்க.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் - உரைவளம்

காமத்துப்பால்.

ஏனைய பால்களைப் போலவே உரைப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, முதுமொழி வெண்பாக்கள், ஆகிய ஐந்து பிரிவுகளில் உரை வளம் தொகுக்கப்பெற்றுள்ளன.

தொகுப்பாசிரியர், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் 51 தலைப்புகளில் ஓர் அரிய பெரிய நூலாராய்ச்சி எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது.

M. O. மூலம் பணம் அனுப்பிப் பெறவேண்டும்.

கிரௌன் 1×4 சைஸ் பக்கம் 520

காலிகோ கட்டடம் விலை ரூ. 6—0—0.

தபால்கூலி வகையரு 1—0—0.

கிடைக்குமிடம்:—

மானேஜர்,
தருமபுர ஆதீனம்.
தருமபுரம், மாயூரம் P. O.
தஞ்சாவூர் ஜில்லா.

திருக்கோளிலியில் விசேஷ வழிபாடு

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை என வழங்கும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் உலகம் சுபிக்ஷமாக விளங்கவேண்டும் என்ற திருவுள்ளங்கொண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆணைப்படி பெருமானுக்குப் பஞ்சமுகார்ச்சனையும், அம்பிகைக்கு நவமுகார்ச்சனையும், தியாகராஜப்பெருமானுக்கு முசுகுந்தார்ச்சனையும் நடைபெற்றன. விநாயகர், சுப்பிரமணியர் உள்ளிட்ட மூர்த்திகளுக்கும் சகஸ்ரநாம அர்ச்சனை நடத்தப்பெற்றது. ஒலிபெருக்கியின்வாயிலாக திருமுறை முழக்கம் செய்யப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் எழுந்தருளியாகி வழிபாடாற்றி அனைவர்க்கும் அருட்பிரசாதம் வழங்கினார்கள். அம்மையின் சந்தனக்காப்பலங்காரம் தனியழகு. ஏராளமான அன்பர்கள்வந்து தரிசித்து இன்புற்றார்கள்.

வேளூரில் வழிபாடு

8—7—53 செவ்வாயன்று திருக்கார்த்திகையை முன்னிட்டு, வழக்கம்போல் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வைத்தீசுவரன் கோயிலுக்கு எழுந்தருளியாகி ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப்பெருமானை வழிபட்டு அப்பெருமானது திருவருட்பெருக்கில் திளைத்தார்கள். ஆதீன ஓதுவாமூர்த்திகள் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்ப் பாடல்களையும், திருவருட்பாப் பாடல்களையும் ஒலி பெருக்கியில் பாடி அனைவரையும் பரவசமுறச்செய்தார்கள். ஆதீனப் பிரசாரவாகனமும் சென்றிருந்தது. பிரசாரகோஷ்டியினரும் கலந்துகொண்டார்கள்.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகங்களையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம் மாதத்திலும் 20—6—53 அன்று திருவன்னியூர் அக்கினீச்சுவரர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்றது.

Prntied & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9-7-1953.